வேகமாக படிக்க வழி

மெல்லப் படிக்கிறவர்களையும் வேகமாகப் படிக்கிறவர்களையும் படம் எடுத்துப் பார்த்திருக்கிறார்கள். மெல்லப் படிக்கிறவர்களின் கண்களின் அசைவிலிருந்து அவர்கள் ஒவ்வொரு வார்த்தையாகப் படிக்கிறார்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

வேகமாகப் படிக்கிறவர்களின் கண்களின் அசைவிலிருந்து அவர்கள் ஒவ்வொரு பார்வையிலும் பல வார்த்தைகளை விழுங்கிப் படிக்கிறார்கள் என்பது தெளிவாகிறது!



சுருக்கமாகச் சொன்னால் மெல்லப் படிக்கிறவர்கள் வார்த்தைகளுக்காகப் படிக்கிறார்கள், வேகமாகப் படிக்கிறவர்கள் கருத்துக்களுக்காகப் படிக்கிறார்கள்! இது தான் உண்மை!

ஒரு வரியில் உள்ள எல்லா வார்த்தைகளையும் ஒன்றாகப் படித்து, அதிலுள்ள கருத்தைப் புரிந்து கொள்பவர்களே வேகமாகப் படிக்கிறவர்கள்.


மற்றொரு இரகசியம் இதில் இருக்கிறது. வேகமாகப் படிக்கும்போது, மனமும் வேகமாகக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் படி பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இது பழக்கத்தால் வரும்!

நடக்கும்போது மெல்லவே நடக்கிறவர்கள் இருக்கிறார்கள். ஒரே மாதிரியாக நடப்பதை விட்டு, விரைவாகக் கால்களை எடுத்து வைத்து நடக்கப் பழகிக் கொள்ளலாம். நினைத்தால் இது முடியும். அப்படித்தான் படிப்பதும்.

வேகமாகப் படிக்க வேண்டும், எல்லாக் கருத்துக்களையும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற மன உறுதியுடன் படிக்கத் தொடங்கினால், கொஞ்ச நாட்களில் தன்னால் இது வந்துவிடும்.

படிக்கும்போது உரக்கப் படிப்பதோ, உதடுகளை அசைப்பதோ, விரல்களை அசைப்பதோ, உடலை வளைத்துப் படிப்பதோ கெட்ட பழக்கங்கள். இந்தப் பழக்கங்களை விட்டுவிட வேண்டும். இந்த மாதிரிப் பழக்கங்களை உடையவர்களால் வேகமாகப் படிக்க முடியாது.

பல்கலை வளர்ச்சி



எம். பக்தவத்சலம்

பழைய கால முறையிலேயே கோயில்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கும் என்ற எண்ணத்துடன் அரசாங்கம் சும்மா இருக்க முடியாது. நல்ல முறையில் கோயில் நிர்வாகங்கள் நடத்தப்பட வேண்டும். இதன் மூலமாகப் பழைய கலைகள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

கலை வளர்ச்சி

ஆலயங்கள், அறநிலையங்கள் உயர்வதன் மூலமாக நம்முடைய கலை, இலக்கியம், சிற்பம், ஓவியம் இவை யெல்லாம் வளருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஓவியக்கலை நாளுக்கு நாள் மறைந்து கொண்டே போகிறது. அந்த அற்புதமான கலை மறைந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். பழைய ஓவியத்தைப் புதுப்பிக்கக் கூடியவர்கள் இன்று கிடைப்பதில்லை. அவர்களைத் தேடிப் பார்த்தால் கூட அவர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இப்படிப்பட்ட உயர்ந்த கலைகள் மறைந்து போகாமல் அவைகளை வளர்ப்பதுதான் முக்கிய நோக்கம். அதற்கென்று ஒன்றிரண்டு ஸ்தாபனங்களை அந்த ஆலயங்கள் சார்பாக அமைப்பது என்பதும் நோக்கம்.

முற்காலங்களில் நாதஸ்வரக் கலை கோயில்களில் வளர்ந்து வந்தது. இப்போது நாதஸ்வரக் கலை மறைந்துகொண்டு வருகிறது அதைக் கவனித்து இப்போது நாதஸ்வரக் கலையைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் நாதஸ்வரப் பயிற்சி பழனியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக ஓவியக் கலையை வளர்க்கவேண்டும் என்றும் எண்ணமிருக்கிறது இதற்காகப் பல நிபுணர்களை நியமித்து இந்தக் கலையை எல்லாம் வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம்.

இதேபோன்று டெல்லியில் பல நிபுணர்களையும், பல அறிஞர்

கலையும் கொண்ட லலித கலா அக்காடமி இருப்பதைப் போன்று 'மல்டி பர்பஸ் ஓரியண்டல் எடுகேஷன் இன்ஸ்டிட்யூஷன்' என்ற ஒரு ஸ்தாபனத்தை பழனியில் தொடங்கியிருக்கிறோம். தஞ்சையிலும் இம்மாதிரி ஸ்தாபனத்தைத் தொடங்கலாம். இந்த ஸ்தாபனத்தின் மூலமாக இலக்கியங்கள், கலைகள் இவைகள் எல்லாம் வளருவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

பயிற்சிப் பள்ளிகள்

இப்போது மத்திய சர்க்காரின் ஆதரவில் சிறபக் கலைகளுக்கும் சங்கீதப் பயிற்சிக்கும் பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலமாகக் கலைகளில் ஆராய்ச்சி நடத்த முடியும். பண்ணில் ஆராய்ச்சி நடத்த முடியும். தேவாரம், திருவாசகம் இவைகளில் எல்லாம் ஆராய்ச்சி நடத்த முடியும்.

இதைப்பற்றிக் காமகோடி பீடம் சங்கராச்சாரியார் அவர்களிடமும் கலந்தபோது அவர்களும் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அதாவது இந்தப் பயிற்சிகளைப் பெற்ற பிறகு அவர்கள் மேல்படிப்புப் படிப்பதற்கு வழி செய்து கொடுக்கவேண்டும். இம்மாதிரிப்பட்ட படிப்பு படித்த பின்னால் அவர்கள் யூனிவர்சிடி படிப்பு படிப்பதற்கு வழி செய்து கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தார்கள். இதைப் பற்றி இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதே முறையில் எல்லாக் கலைகளையும் சிறந்த முறையில் அறிந்துகொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

நல்ல நிர்வாகம்

கோயில்களில் வேலை பார்க்கின்றவர்கள் எல்லாம் பயிற்சி பெற வேண்டும். இப்போதுள்ள அமைப்பின்படி பல பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம் பல இடங்களிலும் நல்ல முறையில் நிர்வாகம் நடந்து வருகிறது. பல முன்னேற்றங்களும் ஏற்பட்டு வருகின்றன என்பதைப் பலர் அறிவார்கள். என்னைச் சந்தித்த ஒரு பெரியவர், கழிந்த காலங்களை விட இப்போது சில ஆண்டுகளாக நல்ல சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன; கோயில்கள் எல்லாம் சுத்தமாக இருக்கின்றன முக்கியமாகப் பல இடங்களிலும் கலை வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று கூறினார்.

இம்மாதிரியான நல்ல சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டும் என்ற முறையில்தான் இப்போது ஆகம பயிற்சி, வைகாநச பயிற்சி, பாஞ்சராத்திரைப் பயிற்சி போன்ற பயிற்சிகள் எல்லாம் இப்போது நடத்தப்படுகின்றன. இது தவிர எக்ஸிக்யூட்டிவ் ஆபீசர்களுக்கு எல்லாம் இப்போது எக்ஸ்டன்ஷன் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஏதோ உத்தியோகம் கொடுக்கவேண்டும் என்ற அளவில் மட்டுமல்லாமல் முக்கியமாகக் கோயில்களை எல்லாம் நல்ல முறையில் நிர்வாகம் செய்வதற்குத் தகுந்த வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பூஜை இன்றி

அர்ச்சகர் பயிற்சி, அத்யாபகர் பயிற்சி, வேத பாராயணகார் பயிற்சி, ஓதுவார் பயிற்சி முதலியவைகள் வேண்டாம அது அவசியம் இல்லை என்று கருதுகிறார்கள் சிலர். அவர்களுக்கு நான் சொல்லுகிறேன், சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுதவேண்டும். ஆகவே, ஆலயங்களைப் பொறுத்த மட்டில் பூஜைகள்

நடக்க வேண்டும் பூஜை இல்லாமல் கோயில் இல்லை.

எவ்வளவோ கோயில்களில் சிற்பக்கலை அதிகமாக இருக்கின்றது அதைக் காப்பாற்ற வேண்டியதாக இருக்கிறது. பூஜை இல்லாவிட்டாலும் அங்குள்ள சிற்பக்கலையை மக்கள் அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது.

முக்கியமான செலவு

பூஜை செய்வது என்பது நம்முடைய இஷ்டம் போல் பூஜை செய்வது இல்லை. அது ஒழுங்காக நடக்க வேண்டியதாக இருக்கிறது. அர்ச்சகர் என்றால் அர்ச்சனை மட்டும் செய்வது இல்லை. நல்ல முறையில் பூஜையும் செய்ய வேண்டும். பூஜை செய்வதுதான் முக்கியமானது. அப்படிச் செய்வதற்கு தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலியவைகளில் அனுபவம் இருந்தால் தான் நல்ல முறையில் பூஜையை நடத்தலாம். இதை நன்றாகத் தெரிந்தவர்கள் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்க மாட்டார்கள்

தேவாரம், திருவாசகம், பிரபந்தம், வேதபாராயணம் முதலியவைகளை அனுபவித்தவர்கள், அதைக் கேட்டு, படித்து அனுபவித்தவர்கள், இப்பயிற்சி முறைகளுக்கு ஆட்சேபனை தெரிவிக்க மாட்டார்கள். அதன் அருமை அவர்களுக்குத்தான் தெரியும். இதற்குச் செலவு செய்வது ஒரு முக்கியமான செலவு என்றே அவர்கள் கருதுவார்கள். கோயிலுக்கு வரக்கூடிய வருமானம் அவ்வளவையும் இதற்கு என்று செலவு செய்யப்போவது இல்லை. கோயிலுக்குச் செய்தது போகப் பாக்கி இருக்கக்கூடியதைத்தான் இதற்குச் செலவு செய்யப்படுகிறது.

நாம் நினைப்பது

நாம் மனத்தில் நினைப்பதை அப்படியே மற்றவர்களிடம் சொல்லுகிறோமா? நாம் நினைப்பதை அப்படியே செய்கிறோமா?

கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் தெரியும். நம்மில் பலர் சிந்திப்பதே இல்லை. எதையும் ஆராய்ந்து பார்ப்பது இல்லை. சோம்பல் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். வீணாக ஏன் நாம் கஷ்டப்பட வேண்டும் என்று எந்தப் பிரசினையையும் காதில் போட்டுக் கொள்ளாமல் இருக்க விரும்புகிறவர்களும் உண்டு!



ஆகையால் நாம் சிந்திக்கவும், சிந்தித்ததை தெளிவுடன் சொல்லவும், அதன்படி செய்யவும் நாம் நாடும் நண்பர்களும் நாம் படிக்கும் புத்தகங்களும் நாம் பாராட்டும் மனிதர்களும் மிக முக்கியம்!

நாம் மனத்தால் வளர வளர நம்மைவிட வயது வந்தவர்கள் சொல்லுவதையும் தவறு என்று சுட்டிக் காட்டுகிறோம். எதிர்க்கிறோம். பழமைவாதிகள் என்கிறோம். ஆனால் அவர்களும் சிறு வயதில் இப்படித்தான் நம்மைப் போல் புரட்சி செய்தார்கள் என்பதை மறந்து விடுகிறோம்.

உலகம் மாறி வருகிறது அதனுடன் நாமும் மாற வேண்டியதுதான் ஆனால் மற்றவர்கள் சொல்லுவது அனைத்தும் தவறு என்று எடுத்துக் கொள்ளக் கூடாது.

சிகரெட் பிடிக்காதவர்களுடன் நாம் பழகினால் நாம் சிகரெட் பிடிக்கக் கற்றுக் கொள்வதில்லை. அப்போது சிகரெட் பிடிக்கிறவர்களைப் பார்த்து அறிவுரை கூறுகிறோம். சிகரெட் பிடிக்கிறவர்களுடன் பழகினால் நமக்கும் அந்தப் பழக்கம் வந்துவிடும்! சிகரெட் பிடிக்காதவர்களைப் பார்த்து நாம் 'வாழத் தெரியாதவர்கள்' என்று சொல்வோம்!

ஆகையால் நம்முடைய நினைப்பிலேயே வெவ்வேறு கோணங்கள் தோன்றுகின்றன! நல்லவர்களுடன் பழகுவது, நல்லவர்களைப் பாராட்டுவது, நல்ல புத்தகங்களைப் படிப்பது என்று வைத்துக் கொண்டால் தான் நம்முடைய நினைப்புக்கள் நன்றாக இருக்கும் அதன்படி செய்யவும் முடியும்!

இயற்கை வழிபாடு இறை வழிபாடே!

N K கிருஷ்ணமூர்த்தி

இயற்கையையே தெய்வமாக வணங்கும் வழக்கம் நீண்ட காலமாக நம் நாட்டில் இருந்து வந்துள்ளது. தொடக்கத்தில அக்னி, சூரியன், வருணன், வாயு முதலிய தெய்வங்களை வழிபட்டு வந்தனர். பின்னர் அத்தெய்வங்களுக்கு உருவங்கள் அமைத்து வணங்கலாயினர். நாகரிகம் ஓங்க ஓங்க, இத் தெய்வங்களுக்குக் கட்டடங்கள் எழுப்பப்பட்டன. ஆனல், சில இடங்களில் இன்றும் இயற்கையே தெய்வமாக வணங்கப்படுகின்றது.

''மலைகளிலே இமாலயம் நான்'' என்று கண்ணபிரான் கீதையில் கூறுகின்றார். காஷ்மீர் பிரதேசத்தில் 'அமர்நாத்' என்னுமிடத்திற் பனிக்கட்டி உறைந்து சிவலிங்கமாகத் திகழ்கிறது. இதைக் காணப் பல்லாயிரக் கணக்கான மக்கள் தொன்றுதொட்டே சென்று தரிசனம் செய்து வந்துள்ளனர். இத்தலம் இமாலய மலைகளின் நடுவில் பதின்மூன்று ஆயிரம் அடி உயரத்தில் உள்ளது. இப் பனிலிங்கம், அமர கங்கா என அழைக்கப்படுகின்ற ஆற்றங் கரையில் உள்ள மிகப் பெரிய குகையினுள் உருவாகின்றது. தானே தோன்றிய லிங்கம் இது. இதன் உயரம் சுமார் ஐந்தடியாகும். இதன் உயரம் மதியின் வளர் தேய் பிறைகளைச் சார்ந்து வளர்ந்தும் தேய்ந்தும் வருகின்றது. இந்த லிங்கத்தின் வலப்புறத்தில தரையோடு ஒட்டின வண்ணம் இரு பனிக் கட்டி மேடைகள் உள்ளன. இவை முறையே கௌரியும், கணேசனுமாவார்கள்.

சிராவண பௌர்ணமியில் இக்குகைக்கு இந்தியா முழுவதிலிருந்தும ஆயிரக்கணக்கான சாதுக்கள், சந்நியாசிகள், ஆண் பெண் பாலார்கள் வந்து அமரநாதரைத் தரிசிக்கிறார்கள். வழியில் பல இன்னல்கள் இருந்தாலும் அமரநாதரின் அருளினால் அவையெல்லாம பரிதிமுன் பனிபோல் மறைய, இறைவனின் அருள் கிடைக்கின்றது.

ஒரு சமயம் தேவர்களும் அரக்கர்களும் மஹாதேவரைத் தரிசிக்கச் சென்றார்கள். செல்லும் வழியில், யார் முதலில் செல்வது என்பதைப் பற்றிய சர்ச்சை எழுந்து, அது ஒரு வெம்போராக முடிந்தது. தேவர்கள் தோல்வியுறுவதைக் கண்ட மஹாதேவர் அரக்கர்களை அழித்தார். அவ்வாறு அழித்த தோற்றங்களே தற்பொழுது மலைக் குன்றுகளாகவும், கற்பாறைகளாகவும் அங்கும் இங்கும் சிதறிக் கிடக்கின்றன. இதன்மீது ஏறிச் செல்வது அரிதாக இருப்பினும்; இவ்வழியாகச் செல்வதினால் பாபங்கள் விலகும் என மக்கள் நம்புகின்றார்கள். பத்ரி, கேதாரம் போன்ற இமாலய க்ஷேத்திரங்களைப்போல் இவ்விடத்தில் இந்த லிங்கத்தைப் பூசை செய்யப்பூசாரியோ, இதைக் காண வருவோருக்கு வழிகாட்டியோ, திரவியங்களுக்கு உண்டியோ, தீப தூப ஆர்ச்சனைகளோ, யாதும் இல்லை. எப்பொழுது மதியும், ஞாயிறும் தேவனுக்குக் கண்களாயினவோ அப்பொழுது அத்தெய்வத்திற்கு எதைக் கொண்டு பூசை ஆற்றுவது! தரிசனமே போதுமன்றோ?

இங்கு யாரும் தங்குவது இல்லை; தங்க இடமும் இல்லை பகதர்கள் உள்ளம் இன்புற அமரநாதரைத் தரிசித்துத் திரும்புகின்றனர்.

இக் குகையில்தான் ஆதியில் சிவன் உமைக்கு அமரததுவத்தின் இரகசியததைக் கூறினார் என ஒரு வரலாறு கூறுகின்றது. இரு காட்டுப் புறாக்கள் இககுகையில் வந்து போகின்றன. இவை சிவ கணங்களாகும். இவற்றைக் காண்பது மிகவும் போற்றுதற்குரிய புண்ணியச் செயலாகும் என்று அடியார்கள் கருதுகின்றார்கள்.

சேஷ நாகம் என அழைக்கப்படுகின்ற ஒரு பொய்கை அமரநாத் செல்லும் வழியில் இலங்குகின்றது. இப்பொய்கையின் நீர் வெண்ணிறப் பச்சையானது. அண்மையில் உள்ள வரைகளிலிருந்து வரும் அருவிகள் விழுகின்றன. இத்தேககத்தின் ஒரு புறத்தில் மும்மூர்த்திகளை நினைவுபடுத்தும்படியாக மூன்று உச்சிகளை உடைய மலைத்தொடர் ஒன்று உள்ளது. இங்கு ஒரு சமயம், அரக்கர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் வேண்ட, பகவான் விஷ்ணு இந்தப் பொய்கையிலிருந்து வெளிக் கிளம்பினார். ஆயிரம் தலைகளையுடைய சேஷனை விளித்து, அரக்கர்களைத் தன் நாவினால் அழிக்குமாறு ஏவினார். இதிலிருந்துதான் இத்தலத்திற்கு ''சேஷ நாகம்'' எனப் பெயர் வழங்கி வருகின்றது.

சுவாமி விவேகானந்தர் அமரநாத் குகைக்குச் சென்று இப்பனி லிங்கத்தையும் புறாக்களையும் தரிசனம் செய்து, நினைத்தபோது உயிரைத் துறக்கும் வரத்தையும் பெற்றார் என்பது யாவரும் அறிந்ததே

சுவாலையையே தெய்வமாகப் பஞ்சாப் பிரதேசத்தில் ஜ்வாலாமுகி என்ற க்ஷேத்திரததில் மககள் வழிபட்டு வருகின்றனர். இது காங்ராவிற்கு அருகில் பியாஸ் பள்ளத்தாக்கில் மலையின் அடிவாரத்தில் திகழ்கின்றது. இககோவிலினுள் திருவுருவம் கிடையாது. சுவாலைக்குத்தான் பூசை நடக்கின்றது. இதைத் தேவியாக வணங்குகின்றனர். இந்தப் புனித இடம் ஐம்பத்தொன்று சக்தி பீடங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. அழகிய தங்க முலாம பூசிய விமானம் கோவிலை அலங்கரிக்கின்றது. இது வெய்யோன் விரிச்சாதியில சுடர்விடுகின்றது. கோவிலினுள் மூன்று அடிக்கு ஒரு சதுரககுழி உள்ளது. அக்குழியிலிருந்தும சுடர்கள் தம் செந்நாவை நீட்டுகின்றன. அதைச் சுற்றிலும் வலம் வந்திட ஒரு பாதை ஓடுகின்றது. இப்பாதையைச் சுற்றிலும் பல இடங்களில் சுவரோரமாகச் சுவாலைகள் கிளம்புகின்றன இச்சுவாலையைத் தேவியின நாக்கு என்றோ வாய் என்றோ மக்கள் கருதுகிறார்கள். தேவியின் நாக்கு இங்கும், பர்வான் என்ற இடத்தில் அவளது முண்டமும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இக்கோயிலைச் சுற்றிலும் பல சந்நிதிகள் இருக்கின்றன. இவைகளில் ஒன்றிலிருந்து நீரும், சுவாலையும் ஒருங்கே வருகின்றன. ஆனால் நீர் வெப்பமாக இல்லை. இதை ''கோரக்நாத்'' என்று அழைக்கின்றனர். இதற்கு அருகாமையில் காளியின் சந்நிதியும் உள்ளது.

இதைப்பற்றிய ஒரு புராணக் கதையும் உண்டு. ஜலந்திரன் என்ற ஓர் அசுர அரசனைப் பரமசிவன் மலைகளைக்கொண்டே

வென்றார். அவ்வசுரனின் நினைவுச் சின்னமாக ஜலந்தர் என்றொரு நகரமும் இருக்கின்றது: இச்சுவாலை இவ்வரக்கனுடைய வாயிலிருந்துதான் வருகின்றது எனக் கதை கூறுகிறது.

இத் திருக்கோயிலின் வாயிலில் உள்ள மடிப்புக் கதவுகள் வெள்ளித் தகட்டினால் ஆனவை. இவை காரக்சிங் என்ற ஒரு சீக்கிய மன்னனால் அளிக்கப்பட்டவை.

ரசவாத ரகசியத்தை அறிந்து கொள்வதற்காக கி. பி. 650-ல் இந்தியாவிற்கு வந்த ஒரு சைன தூதுவன் தன் குறிப்புகளில் சுவாலாமுகியைப்பற்றிக் கூறியுள்ளான் :

இத்தலம் 1905-ல் ஏற்பட்ட ஒரு பூகம்பத்தில் சிறிது பழுதடைந்ததாகத் தெரிய வருகின்றது. தரை ஆராய்ச்சியாளர்கள் இத்தலமும் இதைச் சார்ந்த பிரதேசமும் எரிமலைப் பிரதேசமாக இருந்திருக்கலாம் எனக் கருதுகின்றார்கள். பூமியினடியில் இயற்கையாக எரியும் தன்மை வாய்ந்த ஒரு வாயு திடீர் திடீர் என வெளிக் கிளம்புகிறது. இவ்விடத்தில் பூமியினடியில் எண்ணெய் கிடைக்கலாம் எனக் கருதுகின்றனர்.

இயற்கையையே தெய்வமாக வணங்கும் மக்கள், இச்சுவாலையைத் தேவியாகக் கொண்டதில் யாதொரு வியப்புமில்லை.

நவராத்திரியில் இங்கு மிகப் பெரிய திருவிழா நடக்கின்றது.

சுவாலாமுகியிலிருந்து சில மைல்களுக்கு அப்பால் காங்ரா என்ற இடத்தில் மஹாமாயியின் திருக்கோயில் மிளிர்கின்றது. இத்தேவியை ''வஜ்ரேஸ்வரி'' என்றும் ''வித்யேஸ்வரி'' என்றும் அழைப்பது உண்டு. இங்கு வாக்கு யந்திரம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இதுவும் ஐம்பத்தொன்று சக்திபீடங்களில் ஒன்றாகக் கணக்கிடப்படுகின்றது. இதற்கு அருகாமையிலே நாகர் கோட் என்ற இடத்தில் புகழ் பெற்ற கோட்டை நிமிர்ந்து நிற்கிறது. இவையனைத்தும் அடிக்கடி கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. மகம்மது கஜனி 1019-லும், பின்னர் மகம்மது துக்ளக் 1337—லும், கொள்ளையடித்திருக்கிறார்கள் பல தடவைகள் கை மாறி பிரிட்டிஷ் காலத்திலிருந்து தக்க முறையில பரிபாலிக்கப்படுகின்றது. நவராத்திரியில் திருவிழா நடக்கின்றது.

இயற்கை எழில் தாண்டவமாடுகின்ற இடங்களில்தான் ஆண்டவனுக்கும் அடியார்களுக்கும் ஓர் இடையறாத தொடர்பு நிற்கின்றது என்பதை இராமாயணமும் மிகக் கவின் பெறச் சித்திரிக்கின்றதன்றோ?



உ

திருச்சிற்றம்பலம்

ஐயா அருணகிரி
அப்பா உனைப்போல
மெய்யாக ஓர் சொல்
விளம்பினர்யார்—வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றூர்
தன்னனையாய் முக்கண்ணெந்தை
நாற்றிசைக்குங் கைகாட்டினுன்

மூன்றுகண்ணு முத்தொழிலா
மும்முதலா மூவுலகும்
தோன்றக் கருணைபொழி
தோன்றலே—ஈன்றஅன்னை
தன்னைப்போல் அன்பு
தழைத்தோய் ஒருதெய்வம்
உன்னைப்போல் உண்டோ உரை.

—தாயுமானுர்.



அமெரிக்கா பிரசங்கம்

சுவாமி விவேகானந்தர்

"*1893*-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் *11*-ந் தேதியன்று, சிகாகோ நகரத்திலே பூவுலகிற்குப் பொதுவாகக் கூடிய சமய ஆராய்ச்சிப் பெருங் கழகத்திலே வாழ்த்துரைக்கு மறுமொழியாக அருளிச் செய்தது.

"அமெரிக்க நாட்டு

சகோதரிகளே, சகோதரர்களே!

அன்பினோடும் ஆர்வத்தினோடும் நீங்கள் அளித்த வாழ்த்துரைக்கு மறுமொழி கூற யான் எழுந்து நிற்கும் இச்செயலானது சொல்லுதற்கரிய உவகையினாலே எனது உள்ளத்தை நிறைவுறச் செய்கின்றது. உலகிலுள்ள துறவொழுக்க நிலையங்களிலே மிகப் பழமை வாய்ந்த நிலையத்தின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். எல்லாச் சமயங்களுக்குந் தாயாகிய சமயத்தின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றிகூறுகின்றேன்; பல்வேறு வகுப்பினராய்ப் பல பிரிவாகிய மதங்களைக் கைக்கொண்டொழுகுங் கோடிக் கணக்கான இந்திய மக்களின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

இந்த மேடைமீதுள்ள உரையாளருட் சிலர் கிழக்கு நாட்டிலிருந்து வந்த பிரதிநிதிகளைக் குறித்துப் பேசும்பொழுது, சேய்மையிலுள்ள மக்கட் கூட்டத்தினரிடையே யிருந்துவந்த இப் பிரதிநிதிகள் பண்புடைமையாகிய எண்ணத்தினை எல்லா நாட்டிற்குங் கொண்டு செல்லுகின்ற பெருமைக்கு உரிமையுடையார் எனக் கூறினர். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். (பிறருடைய கொள்கையை வெறுத்தொதுக்காத) பண்புடைமை (அக்கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுகின்ற) பொது நோக்கு என்னுமிரண்டினையும் உலகிற்குக்

கற்பித்த சமயத்துக்கு நான் உரியவனெனப் பெருமை பாராட்டுகின்றேன் எல்லாச் சமயங்களையும் அன்பினோடு நோக்குகின்ற பண்புடைமையிலே எங்களுக்கு நம்பிக்கையுண்டு அது மாத்திரமல்ல. எல்லாச் சமயங்களையும் உண்மை மார்க்கங்களெனநாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். உலகத்திலுள்ள எல்லாச் சாதியாராலும் மதங்களாலும் துன்புறுத்தி யொதுக்கப்பட்ட மக்களுக்கு அடைக்கலந் தந்து காப்பாற்றிய ஒரு சாதிக்கு நான் உரியேன் என்பதைக் குறித்துப் பெருமை பாராட்டுகிறேன். உரோமருடைய கொடுஞ் செயலினாலே தமது பரிசுத்த தேவாலயம் சின்னாபின்னப்பட்ட ஆண்டிலே தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் அடைக்கலம் புகுந்த கலப்பில்லாத இஸ்ரவேல் சாதியாரில் மிஞ்சியிருந்தவர்களை நாங்கள் அன்பினோடு அணைத்துக் கொண்டோம் என்பதனை உங்களுக்கு எடுத்துச் சொல்லும் பெருமை எனக்கு உண்டு. மகத்துவம் பொருந்திய சொராஸ்திரிய சாதியாரிலே எஞ்சியிருந்தோர்க்குப் புகலிடங்கொடுத்து இன்றும் பாதுகாத்து வருகிற ஒரு சமயத்துக்கு யான் உரியேன் எனப் பெருமை பாராட்டுகின்றேன். என தன்புள்ள சகோதரர்களே! சிறு வயதிலே நான் பல முறை ஓதியதும், இன்னும் கோடிக்கணக்கான மானிடர்களாலே ஓதப்படுவதுமாகிய ஒரு கீதத்திலிருந்து சில அடிகள் எடுத்து உங்கள் முன்னிலையிலே சொல்லுவேன்.

“எண்ணுமிரு நிலத்தெழுந்த
பலநதியு
மிறுதியில்வந்
தெறிநீர் வேலை
நண்ணுகின்ற
வியல்பதுபோற் பலவேறு
தகைமையராய்
ஞான நாடும்
மண்ணகத்தோர் செல்லுநெறி
செம்மையதாய்க்
கோடணையாய்
மருவு மனும்
புண்ணியனே
நினையடையு மார்க்கமவை
யனைத்துமெனப்
புகல்வன் யானே.”

இதுவரை ஒரு காலத்திலும் ஏற்படாத மகா மகத்துவம் பொருந்திய சர்வசமய ஆராய்ச்சிக் கழகமாகிய இம்மகா சபையானது கீதையிலே கூறப்பட்டிருக்கும் ஒரு பெரிய அற்புதமான உண்மையைத் தெளிவுபடுத்தி வற்புறுத்துகின்றது.

“மெய்வகைய திதுவென்ன வேண்டியவர் வேண்டியன வவ்வகைய தெய்வமுமா யளிப்பேனும் யானே காண்.” “யாதாயினும் ஒரு மார்க்கத்தைப் பின்பற்றி என்னை யாவன் நாடுகின்றானோ, யான் அவனை அடைகின்றேன். ஈற்றிலே என்னை அடைகின்ற மார்க்கங்களிலே எல்லா மக்களும் முயன்று செல்லுகின்றார்கள்” மத விகற்பங்களும், மதச் சண்டைகளும், அவற்றினின்று ஏற்பட்ட கொடிய பிடிவாதமும் அழகிய பூவுலகத்தை நெடிது பற்றியிருந்தன. இந் நிலவுலகத்தை அவை கொடுஞ் செயலினாலே நிறைத்துவிட்டன. மீட்டும் மீட்டும் மானிட உதிரத்தை எங்கும் பரவச் செய்து நாகரிக வாழ்க்கையை அழித்து மக்கட் கூட்டத்தினரைத் திகைக்கும்படி

செய்துவிட்டன. இந்தக் கொடிய பேய்கள் தோன்றாதிருந்தால் மக்கட் கூட்டமானது இப்பொழுது இருக்கின்ற நிலையினும் பார்க்க மிகவும் உன்னதமான நிலையில் இருந்திருக்கும். குமித்த பேய்கள் அழிந்துபோகிற காலம் நெருங்கிவிட்டது. இன்று காலையிலே அந்த மகா சபை கூடும பொழுது அடித்த மங்கல மணியானது மூடக்கொள்கைகளின் சாவுமணியாகுக. வாளினாலோ, எழுதுகோலினாலோ, ஒருவரையொருவர் பகைக்கின்ற கொடுஞ் செயலானது அகன்றுவிடுக. ஒரே நோக்கத்தினை கொண்டு ஒன்றினையே நாடிச் செல்லுகின்ற மக்களிடையே அன்பினோடு கூடிய எண்ணங்கள் நிறைவு பெறுக. ○

குறை சொல்லுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளவர்களை நாள் தோறும் காணலாம். அவர்கள், நண்பர்களுக்குக் கவலை உண்டாக்குவார்கள். ஆனால் அன்னியரை மகிழ்விப்பார்கள். இல்லாத குறைகளைக்கூறி வருந்துவார்கள்—கிரேவ்ஸ்





ஆச்சார்ய ஸ்ரீ துளசி அவர்களின் உபதேசங்கள்

* வகுப்பு, இனம், பழக்க வழக்கம், நாடு, மொழி இவைகளின் பிரிவு உணர்ச்சி இன்றித் தனி மனிதர் ஒவ்வொருவரையும் தன்னடக்கத்தை மேற்கொள்ளும்படி தூண்ட வேண்டும்.

* தோழமை, ஒற்றுமை, அமைதி ஆகியவைகளைப் பரப்ப வேண்டும்.

* சுரண்டலற்ற சுதந்திரமான சமுதாயத்தை நிறுவ வேண்டும்.

* சிந்தனையிலும் செயலிலும் சீரிய புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.

* எவரைப் பற்றியும் தீய மனப்பான்மையும் தீய எண்ணமும் கொள்ளாதிருக்க வேண்டும்.

* எவரைப் பற்றியும் வசைமொழி கூறக்கூடாது.

* எவருடனும் இரக்கமற்ற செயலைச் செய்யக்கூடாது.

* எதையும் கொல்லக்கூடாது.

* பிறர் பொருளையோ பிறர் உழைப்பையோ சுரண்டாதிருக்க வேண்டும்.

* மனித சமூக ஒற்றுமையில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

மணவாழ்க்கையில் பெரிய மனிதர்கள்

உலகத்தின் மிகப் பெரிய மனிதர்கள் எல்லாரும மணம் செய்து கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்ந்து வருகிறார்கள். மணம் செய்து கொண்டவர்களைவிட, மணம் செய்து கொள்ளாதவர்கள் ஒன்றும் அவ்வளவு புகழ் பெறவில்லை.

நெப்போலியனின் மனைவி நெப்போலியனைக் கொடுமைப் படுத்தி விடுவாளாம்! கத்துவதும், கணவனைத் திட்டுவதும், தூற்றுவதும் அவள் வேலை! நெப்போலியன் உலகப் புகழ் பெற்ற போதிலும் மண வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இல்லை!

பிரபல ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய்கூட மண வாழ்க்கையில் மகிழ்ச்சியுடன் இல்லையாம்!

ஆனால் நேருவும் காந்திஜியும் மண வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கண்டவர்கள். இவர்களுடைய மண வாழ்க்கை உலக மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது

பிரிட்டனின் புகழ் பெற்ற அரசியல் தலைவர் சர்ச்சில் கூட மண வாழ்க்கையில் வெற்றி கண்டவர்தான். சர்ச்சில் இராணுவத்தில் வேலை பார்த்தார். எழுத்தாளராக இருந்தார். பத்திரிகை நிருபராக வேலை செய்தார். சரித்திர ஆசிரியராகப் பணியாற்றினார். அரசியல் வாதியாகி மந்திரியாகிப் பிரதம மந்திரியானார். ஆனால் கடைசி வரையில் ஒரே மனைவியுடன்தான் வாழ்ந்தார்!

பலகோடி மக்கள் ரஷ்யப் புரட்சித் தலைவர் லெனினைத் தெய்வமாகவே வணங்குகிறார்கள். லெனினும் மணம் செய்து கொண்டு வெற்றியுடன் வாழ்ந்தவர்தாம். இவருடைய மனைவி எப்போதும் இவருடன் இருந்தார். லெனினை நாடுகடத்திய போதுகூட இவர் தன் கணவனுடனே சென்றாராம்!

லால்பகதூர் சாஸ்திரி மணந்து கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தவர்தான். லால்பகதூரின் குடும்பம் மிகப் பெரிய குடும்பம்.

இந்திரா காந்தியும் மணம் செய்துகொண்டு சில வருடங்கள் கணவனுடன் வாழ்ந்து வந்தார். இந்திராவுக்கு இப்போது கணவர் இல்லை. ○



இராமானுஜரும் அவரது மதமும்

சீதா பார்த்தசாரதி

இன்றைய இந்து மதம் தென்னாட்டில் தோன்றிய சங்கர இராமானுச மத்வ மும்முனிவரின் உபதேச மொழிகளை ஆதாரமாகக் கொண்டதே.

விசிட்டா த்வைதம் எனப்படும் இராமானுச சித்தாந்தத்தைப்பின்பற்றுவோரின் எண்ணிக்கை ஏராளமாக இருந்தும் சங்கரரின் அத்வைதத்துவத்தைப் போன்று இந்தச் சித்தாந்தம் மக்களால் பரவலாக அறியப்படவில்லை.

புத்த மதம் பாரத நாட்டில் ஓங்கியிருந்த சமயம் சங்கரர் தோன்றினார். புத்தர், பகவானைப் பற்றிய சிந்தனை வீணானது என்றும், இப்பிரபஞ்சமும், அதில் வாழும் மக்களுமே கவனத்துக்குறிய பொருள்கள் என்றும் போதித்தார். ஆனால் சங்கரரோ, நேர்மாறாக, வேதங்களின் துணை கொண்டு பகவான் ஒருவனே உண்மைப் பொருள் என்றும் இந்தப் பிரபஞ்சம் அநித்தியமானது, மாயையால் உருவாக்கப்பட்டது என்று நிரூபணம் செய்தார்.

மூன்று நூற்றாண்டுகளுக்குப்பின் அவதரித்த பெரும்பூதூர் மாமுனி பகவான், பிரபஞ்சம் இரண்டும் நித்தியமானவை என்று கூறினார். உலகிலுள்ள சேதன, அசேதனப் பொருள்கள் பரமாத்மாவைப்போல் அழிவற்றவை. சகல ஜீவராசிகளும் சேர்ந்து ஓர் உடலாக அமையுமாகில், அவ்வுடலுக்குப் பகவான் ஆத்துமா என்பதே இராமானுசரின் கூற்று. இதை வைணவ சம்பிரதாயத்தில் சரீர சரீரி சம்மந்தம் என்று சொல்லுவதுண்டு.

சங்கரர் பகவானுக்கும் மாயை அஞானமும் ஏற்படுவதாகச் சொன்னார். ஆனால் ஸ்ரீ பாஷ்யகாரரோ, பரமாத்மா இவைகளுக்கு அப்பாற்பட்டவன், ஜீவனே இவைகளால் பீடிக்கப்பட்டு ஓயாமல் பிறப்பு-இறப்பு சுழலில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறது என்று நிலை நாட்டினார்.

இந்த இரண்டு மத பிரவர்தகர்களும் மோக்ஷத்தை (முக்தி)ப் பற்றிப் பிரஸ்தாபம் செய்கிறார்கள். சங்கரரின் மோக்ஷம் ஜனன மரணங்களிலிருந்து விடுதலையடைவதே. இந்த நிலையை அடைய ஜீவன் எல்லையற்ற ஞானத்தைப் பெறவேண்டும் என்றார். இவர் பக்திக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை.

இராமானுச மதத்தில் பக்தியே மோக்ஷத்திற்குச் சாதனம் என்று கருதப்படுகிறது. ஞானம் ஓரளவு இப் பக்தியை அடையப் பயன்படலாம். மேலும், வைணவர்களின் மோக்ஷம் ஜனன மரணத்திலிருந்து விடுபட்ட நிலை மட்டுமல்ல. ரஸமயமான பகவானை ஜீவன் அவனிடமிருந்து வேறுபட்ட நிலையில் இருந்து அனுபவித்து அவனது பாதங்களில் அனவரதமும் கைங்கர்யம் செய்வதே மோக்ஷ. புருஷார்த்தம் எல்லாம் என்பது மரபு.

அந்தணர் முதல், தீண்டாதோர் வரை அனைவருக்கும் மோக்ஷம் சாத்யம் (கிட்டும்) என்று ஸ்ரீ உடையவர் பறை சாற்றினார். ஸ்வாமி விவேகானந்தர் இராமானுசருக்கு ஜீவ ராசிகளின் பால் உள்ள அன்பையும், அக்கறையையும் பெருமையுடன் பிற நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தார்.

இராமானுசர் தனது புதிய தத்துவங்களை ஸ்ரீ பாஷ்யம், வேதாந்த சங்கிரகம், கீதாபாஷ்யம், முதலான கிரந்தங்கள் மூலம் வெளியிட்டுள்ளார். இத்தத்துவங்கள் போதாயனர், டங்கர், திரமிடர், குகதேவர் ஆகிய பாரத நாட்டின் பழம் பெரும் சிந்தனையாளர்களின் நூல்களை ஆதாரமாகக் கொண்டவை.

உபநிஷதத்தின் சாரத்தைத் தேனினும் இனிய பாட்டுக்களாகத் தெள்ளிய தமிழில் அருளித்தந்த ஆழ்வார்கள் பன்னிருவர் காட்டிய மார்க்கத்திலேயே தான் செல்வதாக ஸ்ரீ பாஷ்யகார் கூறுகிறார். விசிஷ்டாத்வைத மதத்தை ஆழ்வார்கள் மதம் என்றும் கூறுவதுண்டு.

உபநிடதத்தின் பரப்பிரமும் புராணங்களில் கண்ட சகுண (ரூபமுள்ள) தெய்வமும் ஒன்றே என்று இராமனுசர் எடுத்துரைத்தார்.

ஆழ்வார்கள் தெய்விகப் பாடல்களில் அடங்கிய கருத்தின் படி இராமானுசமுனி பகவானிடத்தில், முழு நம்பிக்கையுடன் தனது பாரத்தை ஒப்புவித்தால் ஜீவனுக்குப் பகவதனுக்கிரகம் கிட்டும் என்று விளக்கமாக உபதேசித்துள்ளார். ''ஓம் நமோ நாராயணாய'' என்ற திருமந்திரத்தின் ஏற்றத்தை எடுத்துக் கூறிய இராமானுசரும் அவரது மதமும் மங்காது விளங்க பகவான் அருள் புரிவாராக. ○



சங்கரர் பொன் மொழிகள்

துணை

காலன் நெருங்குகின்றான். நீ பயின்ற கலைகளும் ஓயாமல் செய்து வரும் வியாகரண சாத்திர ஆராய்ச்சிகளும் உன்னைப் பாதுகாக்குமென நினைத்தால் நீ மூடனேயாவாய். கோவிந்தனிடம் அன்பு செலுத்தி அவனை வழிபடு. யமனின் பாசக்கயிற்றினின்று தப்ப இதுவே வழி.

பேராசை

பொருளின் மீதுள்ள பேராசையை விடு. உழைப்பால் அடைந்ததை வைத்துக்கொண்டு திருப்தியடைவாயாக.

பெண் அழகு

பெண்ணின் உடலழகைக் கண்டு மதி கலங்காதே. அழகிய உடலானது இறுதியில் அழியும் சதைதானே என்பதை அடிக்கடி யோசித்துப் பார்! புலன்களை அடக்கு. உலகப் பற்றை விடு.

உலகம்

நோயும் 'நான்' என்ற அகந்தையும் ஆட்சி செலுத்தும் இவ்வுலகம சோகமயமானது. தாமரை இலை மீதிலுள்ள நீர்த் துளிபோல நிலையற்றது. இதனை உணர்வாயாக.

உறவினர்

நீ சம்பாதிக்கும் வரையில் தான் சுற்றத்தார் உன்மீது பரிவு காட்டுவர். வளம் குன்றியதும் உன்னை ஏனென்று கேட்போர் அரிதாய் விடுவர்.

உடல் விபசாரம்

உன் உடலின் மூச்சுள்ள வரையில்தான் உனக்கு விபசாரம் நடக்கும். கடைசி மூச்சு விட்டதும், உன் மனைவியும் உன் சடலத்தைக் கண்டு அஞ்சுவாள்.

ஈடுபாடு

பாலன் விளையாட்டில் கருத்து செலுத்துகிறான்; இளைஞன் காதல் லீலைகள் புரிகிறான்; கிழவன் குடும்பக் கவலையில் ஆழ்கிறான்; எவரும் மெய்ப்பொருளின் மீது சிறிதும் நாட்டங் கொள்வதில்லை!

உலக வாழ்க்கை

உன் மனைவி யார்? உன் மகன் யார்? நீதான் யார்? எங்கிருந்து வந்தாய்? இவ்வுலக வாழ்க்கையே ஒரு விசித்திரம்! இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் உன் மயக்கம் தெளியும். அப்போது இந்த உன் ஜீவாத்மா பரமாத்வே என்பதை உணர்வாய்.

விடுதலைப் பேறு

நல்லோர் உறவின் பயனாகப் பொருள்களின் மீதுள்ள பற்றுப் போம். பற்றுக் குறையக் குறைய மயக்கம் தெளியும். மயக்கம் தீர்ந்தால் சஞ்சல சித்தம் அமைதியுறும். அந்த நிலையில், ஜீவன் உயிருடனிருக்கும்போதே விடுதலைப் பேறு அடைகின்றது. ○

வெளியிடுபவரும், ஆசிரியரும் இராம. மணிமேகலை, 4, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5, பாண்டி பஸார், தியாகராயநகர், சென்னை-17.

ஆசிரியர் : கலைச்செல்வி மணிமேகலை

அருள்

அருட்பெருஞ்ஜோதி



தனிப்பெருங்கருணை

அருள்

தமிழ் மாத முதல் நாள் வெளிவருகிறது

இந்த இதழில்

அருள்-2 செப்டம்பர்

கருணை-12 15-9-68

புரட்டாசி, கீலக விலை: 30 காசு

முதல் முதலாக இந்தியாவிலிருந்து மலேசியா செல்லும் ஒருவருக்கு அந் நாட்டைப் பார்த்தவுடன் சற்று ஆச்சரியமாக இருக்கும். எல்லா இனத்தவரும்—சீனர்கள்—மலாயர்கள்—தமிழர்கள் வேற்றுமை இன்றி ஒன்றிப் பழகி வருகிறார்கள்!

நான் கண்ட மலேசியா

கீதாபோதகர் கிரிதாரி பிரசாத், பி. ஏ., பி. எல்.

மலாயா நாடு என்பது தென் கிழக்கு ஆசியாவிலுள்ள ஒரு சுதந்தர தேசம். இது 1957-ம் ஆண்டு ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. இந்த நாட்டின் ஜனத்தொகை 70 லக்ஷம். சாயி-சாரவாக் என்னும் இரு பகுதிகளையும் சேர்த்து இதற்கு மலேசியா என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. சிங்கப்பூரும் மலேசியாவில் ஒரு பாகமாக இருந்தது. இப்போது சிங்கப்பூர் பிரிந்து தனி அரசாக விளங்குகிறது. சிங்கப்பூரின் ஜனத்தொகை சுமார் 20 லக்ஷம். இதில் 17 லக்ஷம் மக்கள் சீனர்கள். சுமார் ஒரு லக்ஷம் மக்கள் தமிழர்கள். மற்றவர்கள் மலாய் நாட்டினர்.

மலாயாவிலும் சீனர்கள் குடியிருக்கின்றனர். ஜனத்தொகையில் 40 சத விகிதம் சீனர்களும் சுமார் 47 சதவிகிதம் மலாயர்களும் சற்றேறக்குறைய 10 சத விகிதம் தமிழர்களும் அந்த நாட்



டில் வாழ்கின்றனர். தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பகுதி வட்டிவியாபாரிகளாகவும் ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். சில தமிழர்கள் ரப்பர்த் தோட்டங்களின் முதலாளிகளாகவும் இருந்து வருகிறார்கள்.

இந்த நாட்டின் பெரும் பகுதிப் பொருளாதாரம் சீனாகள் கையில்தான் இருக்கிறது. சீனர்கள் இதைத் தங்கள் தாயகமாகவே கொண்டு பல நிலையான நற்பணிகளை ஆற்றி, கல்விக் கூடங்கள் மருத்துவ நிலையங்கள், தொழில்பேட்டைகள்முதலியவற்றை நிர்மாணித்திருக்கிறார்கள். மலாயர்கள் 15 ம் நூற்றாண்டிற்குமுன் தமிழ் இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர் என்றும் பின்னால் இவர்கள் மத மாற்றம் பெற்று முஸ்லீம்கள் ஆயினர் என்றும் சொல்லப்படுகிறது. அந்த நாட்டின் அரசரைப் பரமேசுவரன் என்றும் அரசியைப் பரமேசுவரி என்றும அழைக்கும் பழக்கம் இன்றுவரை இருந்து வருகிறது. ஆட்சி செலுத்தும் அரசினரின் சமயமும் மலாயா மக்களின் சமயமும் — இஸ்லாம் மதமே என்றாலும், பௌத்தமதம், ஹிந்து மதம் ஆகிய இவற்றிற்கு அந்த நாட்டிலே உயர்வு இருக்கிறது.

மொழிக்கொள்கை

மலாய் நாட்டு மக்களின் பொது மொழி மலாய் மொழியே. அநேகமாக இம்மொழியையே சீனர்களும்—மலாயர்களும் தமிழர்களும் தங்கள் தினசரி வாழ்க்கையில் பயன் படுத்துகின்றனர். என்றாலும் அங்குச் சீனம்–மலாய் தமிழ் ஆகிய மூன்று மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு அரசினர் அலுவலகத்திலும் மூன்று மொழிகளிலும் விவரங்களைப் பொறித்திருக்கின்றனர். பல இனங்கள் கொண்ட தேசமாயினும் அங்கு மொழிச் சண்டை இல்லை. கல்விக்கூடங்களில் தமிழ் போதனமொழியாக வழங்கி வருகிறது. இதற்கு அரசாங்கம் பெரும் அளவு மானியம் கொடுத்து உதவுகின்றது.

மலாய் மொழி

இது, தமிழ் — சீனம் போன்று பழங்காலத்து மொழி இல்லை. பழைய இலக்கியங்கள் எதுவும்

இந்த மொழியில் இல்லை. பல மொழிகளில் உள்ள சொற்களை ஏற்று, காலத்திற்கு உகந்தவாறு கடினமான இலக்கண விதிகள் இன்றி இதைச் சமைத்திருக்கிறார்கள். இப்படிப் பிற மொழிகளிலிருந்து கடன் வாங்கிய சொற்களில் பெரும்பகுதி வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய ஜீவாதார கோஷம் என்று சொல்லப்படும் கோஷத்தின் சொற்கள் மூன்றுமே வடமொழிச் சொற்களாக இருக்கின்றன.

Bhasha -Bansa - Jiva

இதன் பொருள், பாஷை தான் ஒரு தேசத்தின் ஜீவன் என்பது. தகுந்த சொற்கள் இல்லாதபோது இவர்கள் ஆங்கிலச் சொற்களையே திருத்தி அப்படியே பயன் படுத்துகிறார்கள். ஆங்கிலத்திலுள்ள Telephone என்னும் தொலை பேசியை Talipon என்று அழைக்கிறார்கள். நாம் ஆங்கிலத்தில் Car என்று சொல்லுவதை Kar என்று அக்ஷரத்தைமாற்றி அதே உச்சரிப்பைப் பயன்படுத்துகிறார்கள். தமிழில் உள்ள மேஜை என்ற சொல்லை Meja என்று பயன்படுத்துகிறார்கள். மந்திரி என்ற சொல்லை Mentri என்று பயன் படுத்துகிறார்கள். தனித்தமிழ் என்று நாம் சொல்லுவது போல் தனி மலாய் மொழி என்னும் பேச்சே அங்கு இல்லை.

இனக்கொள்கை

முதல் முதலாக இந்தியாவிலிருந்து செல்லும் ஒருவருக்கு அந்த நாட்டைப் பார்த்தவுடன் சற்று ஆச்சரியமாக இருக்கும். எல்லா இனங்களும் சீனர்கள்–மலாயர்கள்–தமிழர்கள் வேற்றுமை இன்றி ஒன்று கூடி வாழ்கின்றனர். இனச் சண்டைகள் அந்த நாட்டில் அநேகமாக இல்லை என்றே சொல்லலாம். அரசாங்கத்தின் சமயம் இஸ்லாமிய சமயமே என்றாலும், தமிழர்கள், சீனர்கள் ஆகிய இருவரும் கட்டும் ஆலயங்களுக்கும் பொது நிலையங்களுக்கும் அரசினர் வேற்றுமை இன்றி மான்யங்களைக் கொடுத்து உதவி வருகின்றனர்.

அநேகமாக இந்த நாட்டிற்குச் சென்று திரும்பினால் ஐக்கிய நாட்டின் சபை ஒன்றிற்குச் சென்று திரும்பிய உணர்வே வருகிறது.

சீதோஷ்ண நிலை

இந்த நாட்டின் சீதோஷ்ண நிலை மிதமாக இருக்கிறது. வெப்பம் 90 டிகிரி மேல் செல்வதில்லை. ஆண்டு முழுவதும் மழை பெய்து கொண்டே இருக்கிறது. இங்கு இரப்பரும்–டின் –(Tin) ஆகிய இரண்டும் விளைகின்றன. ஜனத்தொகை மிகவும் குறைவாக இருப்பதால் நாடு முழுவதும் தோட்டங்களாகவே இருக்கின்றன. மக்களின் கடின உழைப்பிற்கு இங்கு அவசியம் இல்லை. மழைவிடாது வேண்டிய அளவு பெய்வதால் நாடு முழுவதும் வளமாக இருக்கிறது. சாலைகள் சீராக விசாலமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. அங்கு பார்க்க முடியாத ஒரே ஒரு பொருள் தூசிதான். எத்தனை நூறு மைல்கள் பிரயாணம் செய்தாலும் உடம்பில் கொஞ்சமும் தூசி படிவதில்லை!

தொடர்புடையாரிடத்துத் தோன்றுவது அருள்.
தொடர்பில்லாதவர்களிடத்தும் தோன்றுவது அருள்.
அன்பு நிலையைவிட அருள் நிலையே உயர்ந்தது

தோன்றாத் துணை

ஆ. மா. கோவிந்தசாமிப் பிள்ளை

பண்டைத் தமிழ்ப் பெருமக்கள், வாழ்க்கையை அகவாழ்க்கை என்றும் புற வாழ்க்கை என்றும் இரண்டாகப் பகுத்திருந்தார்கள். அக வாழ்க்கை என்பது கணவனும் மனைவியுமாக இல்லறத்திலிருந்து நிகழ்த்தும் குடும்ப வாழ்க்கையாகும். புறம் என்பது அரசியல் முதலாய நாட்டு அலலது சமுதாய வாழ்க்கையாகும். நாட்டு வாழ்க்கையாகிய பொது வாழ்வு சீர்பெற வேண்டுமானால், குடும்ப வாழ்க்கையாகிய தனிப்பட்ட வாழ்வு முதலில் சீர்பட வேண்டும். உள்ளம் தூய்மையாக இருந்தால்தான் எல்லாம் தூய்மை பெறும். ஆறறிவு கொண்டவர்கள் ஐயறிவு கொண்ட உயிர்களிடத்து காட்டுகின்ற கருணை அருள் ஆகும். தொடர்புடையாரிடத்துத் தோன்றுவது அன்பு, தொடர்பு இல்லாதவற்றின் மேலெல்லாம் தோன்றுவது அருள். அன்பில்லா வாழ்க்கையைப் பற்றி வள்ளுவர் கூறுவதாவது, பாலை நிலத்தில் பட்ட மரம் துளிர்ப்பது போலாகும் என்பதாம். மேலும் அன்புடைமை என்னும் அதிகாரத்தில் அன்பிலாரெலாம் தமக்குரியவர், அன்புடையார் என்பும் உரியர்பிறர்க்கு என்றுகூறியுள்ளார். அதற்குப் புறநானூற்றில் சான்று காட்டப்பட்டுள்ளது. தன்ன கம்புக்க குறு நடைப்புறவின் தபுதி யஞ்சிச் சீரைபுக்கோன் என்று தன்னை அடைக்கலம் என வந்த புறவிற்குத் தன்னையே கொடுத்த சிபியின் வரலாறு இந்த உலகம் உள்ளளவும் நின்று சான்று கூறும்.

அன்பில்லா வாழ்க்கை பாலை நிலத்தில் பட்ட மரம் தளிர்ப்பது போலாகும் என்று தமிழ் நூல் கூறுவதை நாம் அறிவோம்.



அன்பு என்பது தொடர்புடையாரிடத்துத் தோன்றுவது, அன்பின் முதிர்வால் தொடர்பு அற்றாரிடத்தும் தோன்றுவது அருள்.

துறவற நெறியில் நின்றோர்க்கு அருள் இன்றியமையாதது. அருட் செல்வம் செல்வத்துள் செல்வம் என்பது முது மொழி. பலவகைச் செல்வங்களுள் செல்வம் எனப் படுவது அருளால் வரும் செல்வமேயாகும். ஒருவனுக்குப் பொன்றாத் துணையாக நிற்பது அருளேயாகும்.


அருளுடையார்க்கு எத்தகைய துன்பமும் வராது. பொருளில்லாதவர்கட்கு இவ்வுலகில் இன்பம் இல்லை. இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள் என்பதையும் நாம் மறத்தல் இயலாது.

இது போல் அருள் இல்லாதவர்கட்கு மேல் உலகில் இடமில்லை என்பதை வள்ளுவர் நயம்படக் கூறியுள்ளார்.

இந்நில உலக வாழ்வில் அருள் உள்ளங் கொண்டு வாழத் தெரியாதவர்கள் மக்கட்பதர் ஆவார்கள். அறங்களுக்கெல்லாம் தலையாயது அருளறமே. மேலும் வள்ளுவர் அன்பைத் தாயாகவும் அருளைக் குழந்தையாகவும் பொருளைச் செவிலித் தாயாகவும் உருவகித்து ஒரு குறளுக்கு வடிவம் கொடுத்துள்ளார் ஆகையால் அருளே அனைத்திலும் சிறந்தது!

அறங்கடவாமல், நெறிபிறழாமல், எல்லா இன்பங்களையும் ஜாம் ஜாம் என்று அனுபவித்துக் கொண்டே பூவுலகில் வாழலாம்; அப்படி இன்பம் துய்ப்பது வீடு பேற்றிற்கு எவ்வகையிலும், அற்ப அளவுகூட, இடையூருக மாட்டாது.

நல்லவண்ணம் வாழலாம்



சா. கணேசன்

திருஞானசம்பந்தப் பெருமான் ஒரு அருள்நெறிச் செல்வர் ''திரு நெறிய தமிழ்' தந்தவர். அவரைப் பலரும் சமயம் வளர்த்த சான்ருேராகவே கருதுவர். அவர் தம்மை எங்கும் சமயம் காக்க வந்தவராகக் கூறிக் கொள்ளவில்லை. 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்,' 'கேள்வி ஞான நலம் திகழும் ஞான சம்பந்தன்,' 'மறை ஞான சம்பந்தன்' 'முத்தமிழ் நான் மறை ஞானசம்பந்தன்' என்றெல்லாம் பேசுகிறவர் ஓரிடத்தில் 'தமிழ் விரகன் என்றே தம்மைக் குறிப்பிடுகிருர்.

இவை போன்ற பல சான்றுகளைக் காட்டி, அவர் தமிழ் வளர்த்த புலவர் என்று, அறிஞர் உலகம், சம்பந்தரைப் பாராட்டும்.

சமய குரவராக அடையாளம் கண்டு கொள்வது எவருக்கும் எளிது. அங்ஙனமே, பண்ணோடு தமிழ் பரவிய கலைஞராகவும் எளிதில் அவரை இனம் கண்டு கொள்ளலாம். ஆனால், வாழ்க்கைத் துறையிலேஎவ்வளவுபுரட்சிக்காரராக அவர் விளங்கினார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா? அதற்காக, இங்கே, ஒரு பெரிய ஆராய்ச்சி நடத்தப் போகிறேனோ என்று யாரும் அஞ்ச வேண்டாம்.

''சமய வாழ்வு என்றால் கடுமையான நோன்புகளை மேற்கொள்ள வேண்டும்; இவ்வுலக இன்பங்களில் ஈடுபாடு கொள்ளக் கூடாது'' என்பன போன்ற கருத்துக்கள் பரவலாக நிலவிய காலம், சம்பந்தர் தோன்றிய காலம். காடும் மலையுமே கதி மோட்சம் தரும் இடங்கள் என நம்பிய காலம் அது. அன்று தோன்றிய சம்பந்தப் பிள்ளையார் பாரதியைப் போன்ற ஒரு பெரும் புரட்சிக்காரர்.

''உலக வாழ்வு மாய வாழ்வல்ல; அன்பும் அறனும் கடைப்பிடித்து, இன்ப நெறி நிற்றலே வீடு பேற்றை யடைவதற்கு ஒப்பற்ற எளிய வழி'' என்பதைச் சமய உலகில் வாழ்வார்க்கு எடுத்துணர்த்திய செந்நெறிச் செல்வர் ஆளுடைப் பிள்ளையார் தாம்.

''மண்ணுலகில் எல்லா விதமான சுகபோகங்களுடனும் வாழலாம், ஆம் எப்பொழுதும் வாழலாம். சிந்தித்துப் பார்த்தால், மேலான சிவகதி யடைவதற்கு எவ்விதமான சிறு குறைவும் அதனால் உண்டாக மாட்டாது. ஒரு வித இடையூறும் இல்லாமல் அந்தப் பதவி கிட்டும். (இதற்கு என்ன சான்று என்று கேட்கிறீர்கள்? கூறுகிறேன்) கழுமலம் கழுமலம் என்று சொல்லுகிறோமே, அந்தச் சீகாழிப் பெருங்கோயிலுக்குச் சென்று காணுங்கள். நங்கையர்களின் நாச்சியாரான பார்வதியுடன் முழுமுதற் கடவுளான பரமேச்வரனே என்றும் ஒன்றியிருந்து வருவதைக் காணலாம்'' என்று நமக்கெல்லாம் அறிவுறுத்துகிற அப் பாசுரத்தை இனிப் பார்க்கலாம்.

மண்ணில் நல்ல வண்ணம்
வாழலாம், வைகலும்;
எண்ணில், நல்ல கதிக்கு யாதும்
ஓர் குறைவு இலை;
கண் இல் நல் அஃது உறும்;
கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும்
பெருந்தகை இருந்ததே.

[மண்ணில் — பூவுலகில்; நல்ல வண்ணம்—தீமையில்லாத வாறு; முழுக்க முழுக்க; வைகலும்—எப்பொழுதும்; எண்ணில் — சிந்தித்துப்பார்த்தால்; அளவற்ற; நல்ல கதி — சிவகதி; பேரின்ப நிலை; யாதும் — எவ்விதத்தும்; ஓர் — சிறிது; அற்ப அளவு; கண்—இடுக்கண்; நல்-அஃது — நன்மை யான அது-அதாவது, சிவகதி; கழுமலம் சீர்காழிக்குள்ள பெயர்களில் ஒன்று; வளநகர் — பெருங்கோயில்; 'பெருந்தகை இருந்ததே' என்பதைப் பெருந்தகையே இருந்தது என்று கொண்டு கூட்டிப் பொருள் காண்க]

அறங்கடவாமல், நெறிபிறழாமல், எல்லா இன்பங்களையும் ஜாம் ஜாம் என்று அனுபவித்துக் கொண்டே பூவுலகில் வாழலாம்; அப்படி இன்பம் துய்ப்பது வீடுபேற்றிக்கு எவ்வகையிலும் அற்ப அளவு கூட, இடையூறாக மாட்டாது; ஒழுக்கமாக வாழ்வதுதான் சமய வாழ்வு என்பதை எல்லாம் எவ்வளவு நயமாக, அருமையாக. உணர்த்தி விடுகிறார் பாரத்தீர்களா?

இதுதான் அருள்நெறி! ஆண்டவனை நம்பி, தன் கடமை செய்தே நல்ல எண்ணம் (பிறர்க்குத் தீமையின்றி, அறம் தவறாது) இவ்வுலகில் எல்லாவித இன்பங்களையும் முறையாக அனுபவித்துக் கொண்டு வாழ்வதுதான் வாழ்வு. அந்த நெறியில் உலகெலாம் வாழ்க! என நாமும் அவனருளாலே அவனை வேண்டுவோமாக!



அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாறாத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
Kali
mark
5 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

அருள் இயல்பினனுக்கு வடிவம் ஒன்று கூற வேண்டுமானல் உருவமாகவோ, அருவமாகவோ கூருது, பொதுப்பட உருவம் போலவும், அருவமாகவும் ஜோதி ஒன்றே விளங்குவதாகும்.

நடம் புரியும் இடம்

நா. மகாலிங்கம், B. Sc., M. I. E.,

ஒரு நாட்டிற்குப் பெருமை அந்நாட்டில் ஓங்கியுள்ள மலைகளினுலோ, வற்ருத வளம் கொழிக்கும் ஆறுகளினுலோ மட்டும் அல்ல; அந்நாட்டில் தோன்றிய ஒப்பற்ற பெரியோர்களால் தாம் உண்மையான புகழ் உண்டாகின்றது.



காட்டு நிலமானுலும் வாழும் மக்களின் தன்மையைப் பொறுத்துதான் அந்நிலம் போற்றப்படுகிறது. 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்று தமிழ் மூதாட்டியார் ஔவையாரும் கூறியுள்ளார். இத்தகைய 'புகழ்' மண்டிக் கிடக்கும் பெருமை தமிழ் நாட்டுக்கு என்றுமே உண்டு. அத்தகைய புகழ் விளைத்த அருளாளர்களுள் அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்கப் பெருமான் தனிச்சிறப்பு வாய்ந்தவராவார். எம்மதமும் சம்மதம் என்ற அழகிய வாக்கியத்திற்கேற்ப, உலகம் முழுவதும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுச் சமூகமாகக் காணவேண்டுமென்ற ஒப்பற்ற ஞானவுரையை வழங்கியருளினுர்கள்.

உலகம் வளர்ந்து செல்லும் வேகத்தைக் காணும்போது ஒரு சிலமணி நேரங்களில் சுற்றி வருகின்ற மைதானத்தளவுக்கு அது குறுகிவிட்டது. இவ்வாறு உலகம் குறுகிவிட்டதால் நம் மனம் இப்போது பெருகியாக வேண்டும் என்று நம் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் ஒருமுறை கூறினார்கள். அக்கருத்தின் படி உலகம் முழுவதையும் தழுவிச் செல்லும் மனப்பான்மை எல்லாரிடத்தும் ஏற்படவேண்டும். நாடுகளின் மேல் கிழிக்கப்படுகின்ற கோடுகளோ, எழுப்பப்படுகின்ற சுவர்களோ எல்லையாகத்தான் அமைய முடியுமே தவிர, அவ்வந்நாட்டு மக்களை—அவர்கள் மனிதாபிமானங்களை மாற்றமுடியாதனவாகும். இந்திய—பாகிஸ்தானிய எல்லைப்போர் நடந்து கொண்டிருந்தபோது கூட 'இரு நாட்டு வீரர்களும் இறக்கிறார்களே, அவர்கள் இருவரும் உலகத்தாயின் மக்கள் அல்லவா' என வருந்திக் கூறினார் ஆச்சார்யா வினோபா பாவே அவர்கள். உலக மக்கள் எல்லாரும் அன்பால் அருளால் வாழும் முறைப்படி வாழவேண்டும். அவர்களைப் பிரிக்கும் சாதி, மதம், மொழி, இனம், கோத்திரம், குலம் இவைகள் எல்லாம் மறைந்து போக வேண்டும். உலகமக்கள் அனைவரும் வாழும் உரிமை உடையவர்கள். மக்கள் என்ற அளவோடு நில்லாமல் உலக உயிர்கள் முழுவதின் உரிமையையும் தகுதியையும் நாம் இங்கே நிலைநிறுத்த வேண்டும் என்று வள்ளற்பெருமான் கசிந்து உருகுகின்றார்கள்.

எல்லாம் கடந்த பொருளாகவும், எல்லாவற்றுள்ளும் நிறைந்த பொருளாகவும் விளங்கும் பரம்பொருளைக் கடவுள் என்று கூறுகிறோம். அக்கடவுளின் இயல்பினைக் காண்பதற்கு ஒரு வழி வேண்டும் என்று பெரியோர்கள் கருதினார்கள். அளந்தறிய முடியாத உலகத்தையும், எண்ண முடியாத பொருட்களையும், கண்டறிய முடியாத சில விநோதங்களையும் படைத்ததோடு அப் பொருட்கள் யாவும் மனிதனுக்குத் துணையாக வசதி தருவதாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இத் துணைப் பொருட்களையும் மனிதனுக்கு நலம் தருவதாக ஆக்கியவனை அன்புடையவன் என்று கூறுவதைக் காட்டிலும் அதைவிடப் பெரிய அருளுடைய

வன் என்று அழைப்பதைப் பொருத்தமென நினைத்தார். கள் 'அருளாளா' என்றே அடியவர்கள் அழைப்பார் கள். அருள் இயல்பின னுக்கு, வடிவம் ஒன்று கூற வேண்டுமானால் உருவமா கவோ அருவமாகவோ கூறாது பொதுப்பட உருவம் போலவும், அருவமாக ஜோதி ஒன்றே விளங்குவ தாகும். ஜோதி என்கிற ஒளியை, விளக்கு தருமே, நிலவு தருமே, கதிரவன் தருமே என்று பார்த்தால்—விளக்கு நம்மால் ஏற்றப் படுவது—நிலவு சூரியனின் நிழலால் சுடர் விடுவது—சூரியனின் வெம்மை சில உயிர்களை வாட்டவல்லது என்று எல்லாம் குறை பட்டுப் போகும். ஆகவே இந்த ஜோதி பெரும் ஜோதி என்றும்—அருளை இயல் பாகக் கொண்ட அருட் பெருஞ் ஜோதி என்றும்—நம் வள்ளற் பெருமான் கூறினார்கள்.

அவ்வருளின் செயல் தான் எதுவென்றால் உலக உயிர்களை எல்லாம் பொது வாகக் கருதி இரக்கப்பட்டு, எல்லார்க்கும் இதம் செய் யும் தெய்வீகச் செயல் தான் அருட் செயல் என் றார்கள். அத்தகைய உயர்ந்த அருட் கொள்கை யுடையவர்கள் செயல் எல் லாம் அருட்செயல் என் றும், அச்செயல் செவ் வியர் தம் செயல் என்றும் அவருடைய மனம்தான் இறைவன் திருநடம் புரி கின்ற இடம் என்றும் கூறி, அன்பு, அருள், ஜீவகா ருண்யம், சமரசம் என்ற நான்கு தூண்களில் சன் மார்க்க மண்டபத்தை நம் பெருமான் சமைத்தார்கள். சாதி சமயங்களைக் கடந்த இந்த ஜோதி நெறியின் இயல்பினையும் அதன் தனிப் பெரும் கருணையின் செயல் முறையினையும் பின்வருமாறு வள்ளலார் விளக்கியருள்கின்றார்கள்.

''எவ்வுயிரும் பொதுவெனக் கண்டிரங்கியுப
கரிக்கின்றார் யாவர் அந்தச்
செவ்வியர்தஞ் செயலனைத்தும் திருவருளின்
செயலெனவே தெரிந்தே னிங்கே''

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவரவர் உளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெரிந்தேன்; அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென்
சிந்தைமிக விழைந்த தாலோ

—

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெரும் கருணை

அருள் என்பது ஆண்டவனின் விளக்கம். ஜீவ தயை விளக்கம். அருள்நிலை பூரணத்துவம் பெற்றது. அன்பு நிலையிலிருந்து அருள் நிலைக்கும் போகவேண்டும்.

அருள்

எம். கே. தீனதயாளன், B.Sc., I.P.S.

அருளாவது என்ன? அருள் என்பது ஆண்டவனின் விளக்கம். அவன் கருணைத் திறத்தின் விளக்கம் இயற்கையின் இன்னிசை வளம். பிறந்த நாள் தொட்டு இயற்கையன்னையின் அருள் வெள்ளத்தில் நாமெல்லாரும் மிதக்கின்றோம். அவள் கருணையை நாம் அறிய வேண்டாமா? அன்னை பராசக்தியின் அருட்பிரவாகம்தான் நம்மையெல்லாம் உய்விக்கின்றது. இதை ஆதிகாலம் தொட்டே பல பெரியார்கள் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள்.



வள்ளுவப் பெருந்தகை திருக்குறளில் கூறுவார், ''அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லாகியாங்கு'' என்று. மற்றும் அம்மறை தந்த நாயனார் சாற்றுகின்றார். ''பொருளற்றார் பூப்பர், அருளற்றார் அற்றாரே'' என்று.

அண்மையில் நம்முடன் வாழ்ந்து திரு அருட்பா அருளிய திருவினார் இராமலிங்க சுவாமிகள் கூட அருளையே கவிதை வெள்ளமாக்கி அதில் அருளை வைத்து ஆயிரமாயிரம் பாடல்களைப் பாடி ஆண்டவனின் உண்மை விளக்கத்தை நமக்குப் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றார் அப் பெரியார். அவர் அன்று அருளைப் பிரகாசம் செய்ததால் அருட்பிரகாச வள்ளல் எனப்பட்டார்.

ஆமாம், அருளாவது என்ன? திரும்பத் திரும்ப இதே கேள்விதான் எழும்புகிறது. பதில்தான் அருள் என்பது ஆண்டவனின் விளக்கம்; ஜீவ தயை விளக்கம். அருள் நிலை பூரணத்துவம் பெற்றது. ஆமாம் அருள் நிலைக்கு ஏகுவது எப்படி? அன்பு

படிப்படக்கிக் கேள்வியெலாம் பற்றறவிட் டடக்கிப்
பார்த்திடலு மடக்கியுறும் பரிசமெலா மடக்கித்
தடிப்புறுமூண் சுவையடக்கிக் கந்தமெலா மடக்கிச்
சாதிமதஞ் சமயமெனுஞ் சழக்கையும்விட் டடக்கி
மடிப்படக்கி நின்றாலும் நில்லேனா னெனவே
வனக்குரங்கும் வியப்பவென்றன் மனக்குரங்கு குதித்த
துடிப்படக்கி யாட்கொண்ட துரையேயென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே

—திருவருட்பா

நிலையிலிருந்துதான் அருள்நிலைக்கு எய்த வேண்டும். அருள்நிலை ஓர் அகண்டாகாரம் என்றால் அன்பு நிலை அதற்கு அடிகோலும் ஓர் வித்து எனக் கொள்ளலாம். அருள் நிலை ஓர் cosmic universe மாதிரி. அருள் நிலை மானிடர்க்கு மட்டுமின்றி எல்லா உயிர்க்கும் பொதுவானது. இயற்கையின் பாற்பட்ட புல் பூண்டு முதல் மானுடர் ஈராகச் சகல உயிர்களும் நுகர்வதற்கென்றே ஆண்டவன் அருளைப் பொழிந்து வைத்து இருக்கின்றார். ஆனால் ஆறும் அறிவு படைத்த மானுடர்க்கு மனம் என்று ஒன்று அமைந்துவிட்டதால் அது போனபடி நாம் போகின்றோம். இயற்கையின் பாற்பட்டுப்போய் அருளை நுகர நம் மனம் இடம் தருவதில்லை. இந்த மனத்தை அடக்கியாண்டு எல்லா உயிர்களையும் ஒன்றாக நினைக்கும் மனப்பண்பு வளர வேண்டும். இதைத்தான் சான்றோர்கள் அன்புவழி, அறவழி என்று பலவாறாகக் கூறியிருக்கின்றார்கள். அருட் பிரகாச வள்ளலார் கூட அருளைப் பிரகாசம் செய்ய அன்புவழியைத்தான் கடைப்பிடித்தார். அதனால் தான் ஆண்டவனிடம் 'தான் ஆருயிர்க்கெல்லாம் அன்புசெயல் வேண்டுமென்று' இறைஞ்சினார்.

அன்பு! அன்பு! இதில் தான் என்ன குழைவு இருக்கின்றது! அன்பையே செய்ய வரம் கேட்ட வள்ளலாருக்கு மனிதனின் வறுமையைக்காண வருத்தம் மேலிடுகிறது. வறுமை, உணர்வையே அழித்துவிடுமே என்று வெம்பினார் அம்மகான். நம் நாட்டில் வேதங்கள் என்ன, உபநிடதங்கள் என்ன, கீதை என்ன, தோன்றிய வேத ஆகமங்கள் என்ன இவையெல்லாம் இருந்து என்ன பயன்? ஒரு பசித்த மனிதனுக்கு உணவளிக்க இவையெல்லாம் உதவவில்லையே என்பதை எண்ணிப் பார்க்கப் பார்க்க அவருக்குக் க்ழிவிரக்கம் மேலிட்டது. "உடுக்கவோ வொரு கந்தைக்கு மேலில்லை, உண்ணவோ உணவுக்கு வழியில்லை, படிக்கவோ பழம் பாய்க்கும் கதியில்லை; பாரில் நல்லவர் பால் சென்று பிச்சைதான் எடுக்கவோ மனமில்லை" என்று மனம் வெதும்பிப் பாடியிருக்கின்றார்.

ஒரு சமயம் வயல் வெளியில் வாடிய பயிர்களைக் கண்ட வள்ளலாரின் மனம் துணுக்குற்றது. 'ஏ! பயிர்களே! நான் பசியால் வாடியிருக்கும் போது என் பசியைத் தீர்த்து என் வாட்டத்தைப் போக்கினீர்களே! இப்பொழுது உங்கள் வாட்டத்தை என்னால் போக்க முடியவில்லையே' என்று அன்பின் மிகுதியால் அரற்றினார் அப்பெரியார்! இவ்விரண்டு உதாரணங்கள் நமக்குப் போதும். ஆருயிர்களிடம் அன்பு செய்வது, அவர்களுக்கு நேர்ந்த இடுக்கண்களைவது; மன்னுயிரைத் தன்னுயிரைப் போல் பாவிப்பது — இவை தாம் நம்முடைய தலையாய பண்பு.

நாம் அன்புள்ளம் கொண்டு எல்லா உயிர்களையும் நோக்க நோக்க நம் உள்ளம் பண்பாடு அடைகிறது. உலக நுகர்ச்சியிலும், ஆணவத்தாலும் கட்டுண்டு கிடக்கும் நம் புறமனம் குவிந்து அகமனம் விரிவடைகின்றது. அத்தருணம் உள்ளொளி பிறக்கின்றது. எல்லாம் வல்ல இறைவன் தன் அருள் ஒளியை வீசிப் பிரகாசிக்கச் செய்கின்றான். அருள் நிலை நமக்குக் கிட்டினால் நம் வாழ்க்கை பூரணத்துவம் பெறும். அருட் ஜோதி உதயமாகும். உலகின் துன்பங்கள் எல்லாம் மறைந்து ஒழியும்.

திருவிழாக் காலங்களிலும் மற்ற விசேட நாட்களிலும் கோவில்களுக்குப் போவதில் ஒரு நன்மையும் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம், கூட்டத்தோடு கூட்டமாகச் சென்று வேடிக்கை பார்த்துவிட்டு வரலாமே தவிர, தெய்வத்தின் அருளைப் பெறமுடியாது.

வீரைமாநகர்

யெ. மு. பெரியணன்

செல்வங்கள் எல்லாவற்றிலுமே அருள் என்கின்ற செல்வமே மிகச் சிறந்தது ஆகும். அருள் நிறைந்த நெஞ்சம் உடையவர்களுக்குத் தீமை அணுகுவதில்லை. மக்களாகிய நாம் நல்ல வழியில் ஆராய்ச்சி செய்து அருள் உடையவர்களாக விளங்குவதற்கு, அறியாமை என்ற இருளைப் போக்கி அருள் என்ற ஒளியைப் பெறுவதற்குத் திருவள்ளுவர், வள்ளலார், விவேகானந்தர், இன்னும் பல பெரியார்களின் நூல்களை ஆழ்ந்து படித்தோமானால் அருள் எல்லாருக்கும் சுலபமாகக் கிடைக்கும். அருள் இல்லாதவர்களுக்கு அவ்வுலக வாழ்க்கை இல்லை!

அருள் தெய்வ வழிபாடுகளில் இருந்துகிடைக்கிறது. தெய்வத்தை ஆலயங்களிலும் வழிபடலாம்; இல்லத்தில் இருந்தும் வழிபடலாம். எங்கிருந்து வழிபட்டாலும் மனத்தை ஒரு நிலையில் நிறுத்தி வழிபட்டோமானால் அருள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. நாம் தெய்வங்



களை வழிபடுவதற்குக் கோவில்களுக்குச் சென்றால் நிம்மதியான முறையில் வழிபடச் சாதாரண நாட்களே சிறந்தது. ஏனென்றால், நம்முடைய ஆத்மாவை ஒரு நிலையில் நிறுத்திக் கடவுளை வழிபட்டு வந்தோமானால் அருள் என்ற ஒளி எல்லாருக்கும் நிச்சயம் கிடைக்கும்.

திருவிழாக் காலங்களிலும், மற்ற விசேட நாட்களிலும் கோவில்களுக்குப்போவதில் ஒரு நன்மையும் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம், கூட்டத்தோடு கூட்டமாகச் சென்று வேடிக்கை பார்த்துவிட்டு வரலாமே தவிரத் தெய்வத்தின் அருளைப் பெற முடியாது.

தமிழகத்தில் பல ஆலயங்கள் இருக்கின்றன. அவைகளின் சிறப்புக்கள் பல. ஆறுபடை வீடுகள் எனச் சொல்லப் படுபவை, திருச்செந்தூர், திருத்தணி, திருப்பரங்குன்றம், பழமுதிர் சோலை என்றபழனி, சிக்கல், அழகர் கோவில் ஆகியவைகள் ஆகும். இந்தக் கோவில்களில் போய் நாம் வழிபடும்பொழுது நம்மை யறியாமல் ஒரு சக்தி ஆட்கொள்கிறது. அங்கு அருள் நமக்கு ஏற்படுகிறது. இது தவிர, மதுரை, தஞ்சாவூர், காஞ்சிபுரம் போன்ற இன்னும் பல ஊர்களில் கோவில்கள் இருக்கின்றன: அதன் மகிமைகள் தனிப்பட்டவையாகும். ஆந்திராவில் உள்ள திருப்பதி வேங்கடாசலபதிக்கடவுள் நிரம்பவும் ஆற்றல் உள்ள தெய்வம் ஆகும் இவைகள் எல்லாம் அருள் வாசகர்களுக்குத் தெரிந்த விஷயமே.

நான் இங்கு எழுதும் வீரைமா நகர் பற்றித் தெரிந்தவர்கள் சொற்பமே. அதைப்பற்றி இங்கு நான் எழுதுகிறேன்

வீரைமாநகர் இராமனாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. அதன் இன்றைய பெயர் சாக்கோட்டை என்பதாகும். புது வயல் என்ற ஊரிலிருந்து சுமார் ஒரு கல் தொலைவில் இது இருக்கிறது.

இந்த ஆலயத்தின் சிறப்பைக் கூறுகிறேன்:

மேன்மை மிக்க பாண்டிய வள நாட்டிலே வெள்ளாற்றிற்குத் தெற்கே, திருப்பெருந்துறைக்கு மேற்கே, கண்ட தேவிக்கு வடக்கே, சமிவனம் என்னும் கோயிலூருக்குக் கிழக்கே வீரவனம், அளகை என்னும் பெயர்களை உடைய ஒரு சிவப்பதி இருக்கிறது. அச்சிவப்பதிக்கு நிகரான சிவப்

அஞ்சலே நீயொரு சிறிதுமென் மகனே
அருட்பெருஞ் ஜோதியை யளித்தன முனக்கே
துஞ்சிய மாந்தரை யெழுப்புக நலமே
சூழ்ந்தசன் மார்க்கத்திற் செலுத்துக சுகமே
விஞ்சுற மெய்ப்பொருள் மேனிலே தனிலே
விஞ்சைகள் பலவுள விளக்குக வென்றாய்
தஞ்சமென் றவர்க்கருள் சத்திய முதலே
தனிநட ராஜவென் சற்குரு மணியே

திருவருட்பா

பதி இப்பூலகில் வேறு ஒன்றும் இல்லை என்று சூத முனிவர் கூறி இருக்கிறார். அச்சிவப்பதியை உள்ளத்தால் எண்ணுவோரும் வாக்கால் மொழிவோரும் வீடுபேற்றினை எளிதிலே அடைவார்கள்.

வீரவனத்தில் பலவகைப்பட்ட மரங்கள் அந்நாளிலிருந்து இருக்கின்றன. அந்த வனத்தில் வேடர்கள் பலபேர் வசித்தார்கள். வேடாகளின் தலைவன் பெயர் வீரன். அவன் ஒருநாள் வள்ளிக்கிழங்கு கொண்டு வர வீரவனத்திற்குச் சென்றான். வனத்திற்குள் சுற்றிவரும்பொழுது அங்கு வீரைமரம் ஒன்று நன்றாக வளர்ந்து நிற்பதைக் கண்டான். மரத்தின் அடியில்புற்று இருந்தது. அந்தப் புற்றிலே வள்ளிக் கொடி ஒன்று வீரை மரத்தைச் சுற்றி மூடிப் படர்ந்திருந்தது. புற்றினுள் சிவலிங்கம் இருப்பது வீரனுக்குத் தெரியாது. கிழங்கை வெட்டி எடுப்பதற்காகப் புற்றை வெட்டினான் இரும்புப் படையால். அப்பொழுது புற்று இடிபட்டது. இரும்புப் படை சிவலிங்கத்தின் திருமுடியில் சிறிது தாக்கியது. உடனே இரத்தம் வெளிப்பட்டது. இரத்தத்தைக் கண்ட வீரன் மயங்கி மண் மேல் வீழ்ந்தான். அவன் வரும்பொழுது அவன்கூட நாய் ஒன்றை அழைத்து வந்திருந்தான். அது அவன் இருக்கும் இடத்தைச் சுற்றி வந்தது. அதன்பின் வீரன் வீட்டிற்கு ஓடி வந்தது. வீரன் மனைவி தன் கணவன் வராது நாய் மட்டும் வந்ததைக் கண்டு நாயின் பின்னால் போனாள். வீரவனத்தில் மரத்தின் பக்கத்தில் வீரன் மயக்கம் அடைந்த நிலையில் கிடப்பதைப் பார்த்தாள். உடனே அலறினாள்! அதன் பின் வீரன் பக்கத்தில் சென்று மூச்சுக்குழலில் கையை வைத்துப் பார்த்தாள். மூச்சு வந்தது. தைரியமாக இருந்தாள். அதன் பின் வீரை மரத்தைப் பார்த்தாள். அங்கு ஏதோ நடந்து இருக்கிறது என்பதை அறிய மரம் அருகில் சென்று வள்ளிக்கிழங்கை எடுத்தாள். அங்கே சிவலிங்கம் இருப்பதைப் பார்த்தாள்! அதன் திருமுடியில் குருதி காணப்படுவதைக் கண்டாள்! உடனே அதைச் சுத்தம் செய்தாள். இரத்தம் வருவது நிற்கவில்லை! அவள் பலவாறு கதறி அழுதாள்! கடைசியில் சிவபெருமான், வேடமாதின் மெய்யன்பிற்கு உள்ளம் இரங்கினார்!

இரத்தம் வெளிவருவது நின்றுவிட்டது! அதன்பின் சிவபெருமானை வேடமாது வேண்டிக் கொண்டாள்.

என் கணவர் செய்த தவறைப் பொறுத்து அருள வேண்டும் என்றும் அவன் மூர்ச்சை தெளிந்து எழுமாறு செய்தல் வேண்டும் என்றும் அவ்வாறு செய்யின் நானும் என்கணவரும் தேவரீருடைய பணிகளைச் செய்துவாழ்வோம் என்றும் கூறினாள். வேடன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான்! அதன் பின் சிவபெருமானை இருவரும் வழிபட்டனர்.

திருமுடியிலே தழும்பு பேற்ற காரணத்தால் 'திருமுடித் தழும்பர்' என்னும் பெயரையும், வீரமரத்தடியிலே தோன்றியபடியால் வீரசேகரர் என்னும் பெயரையும் சிவபெருமான் பெற்றார். இந்த இரண்டு பெயர்களையும் காலைப்பொழுதிலே சொல்லுபவர்கள் பிறவித் துன்பம் நீங்கப் பெறுவதுடன் நல்லறிவையும் பெறுவார்கள்.

வடகிழக்குத் திசையில் உமையவள் திருவுருவம் வெளிப்பட்டு விளங்கியது. அதனை இருவரும் வழிபட்டார்கள். தினந்தோறும் வேடனும், வேடன் மனைவியும் வீரசேகரரையும், உமையாம்பிகையையும் வழிபடுதலை உறுதியான செயலாகக் கடைப்பிடித்து வணங்கி வந்தார்கள். கடைசியில் தெய்வத்தின் அருள் பெற்றார்கள்.

சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்து அரசன் கண்டன் என்பவனுக்கு வெண்குட்ட நோய் இருந்தது. அதனால் அவன் பல ஆலயங்களை வழிபடுவதற்காக, ஊரில் இருந்து புறப்பட்டு வரும் பொழுது, இராமேசுவரம் போவதற்கு வந்தவன் வீரவனத்தில் தங்கி இருந்தான். அப்பொழுது வீரன் அங்கே சென்று அரசனிடம் வீரசேகரருக்கும், உமையாம்பிகைக்கும் கோவில் கட்ட வேண்டும் என்று கேட்டான். அங்கு அதற்குமுன் நடந்த விவரத்தை அரசனிடம் சொன்னான். அதைக் கேட்ட அரசருக்குக் காதில் இருந்த குட்டம் மறைந்தது. அதன் பின் சுவாமி இருக்கும் இடம் எங்கே என்று கேட்டான் அரசன். உடனே அவன் உடம்பில் இருந்த குட்டமும்மறைந்துவிட்டது. உடனே அந்த இடத்திற்கு அரசன் சென்று வழிபட்டு, கோவில் கட்டுவதற்குக் கட்டளை பிறப்பித்தான்.

திருக்கோயில் திருப்பணி முடிவுபெற்ற செய்தியை அமைச்சர்கள் அரசனுக்குத் தெரிவித்தார்கள். அரசன் போய்ப் பார்த்தான். மகிழ்ச்சி அடைந்தான். அதன் பின் மூழ்குவதற்கு நன்னீர்ப்பொய்கை இல்லையே என்று உள்ளம் வருந்தினான். சிவபெருமான் முன்னர்ப் பணிந்து முறையிட்டான். விண்ணொலி ஒன்று, 'நமக்கு முன்பு சிவகங்கை என்னும் பெயருடைய தண்ணீர்ப் பொய்கை ஒன்றை இப்போது புதிதாக உண்டாக்கி அதன் எல்லையை அறிதற்கு மணமலர்களையும் சிதறியுள்ளோம். அதன் எல்லைப்படி அதனைத் தோண்டி உன் பெயரை அத்தீர்த்தத்திற்கு இடுவாயாக" என்று முழங்கியது. அதன்படி அரசன் நன்னீர்ப் பொய்கை ஒன்றை வெட்டி, படி முதலியவைகள் கட்டி, அதற்குச் சோழ தீர்த்தம் என்று பெயரிட்டான். இன்று அதற்குச் சோழர் குளம் என்ற பெயர் வழங்கி வருகிறது. இந்தச் சோழர் குளத்தில் நன்னீர் ஆடி வீரசேகர மூர்த்தியையும், உமையாம்பிகையையும் வழிபட்டு வந்தால் நம் மனத்தில் உள்ள கவலைகள் மாறி அருள் உண்டாகி எல்லா நலன்களையும் நாம் அடையலாம்.

அன்பும் அருளும்

சி. பாலசுப்பிரமணியன், M.A., M. Litt.

அன்பு உலகை ஆளும் நீர்மையுடையது. அனைத்துயிர்க்கும் அன்பு செலுத்த வேண்டும் என்பதே வாழ்வின் குறிக்கோளாக நிற்கிறது. எப்படியாவது வாழ வேண்டும் என்னும் வாழ்க்கையில் உயர்வில்லை; சிறப்பில்லை. இப்படித்தான் வாழவேண்டும் என்னும் வாழ்க்கையில்தான் உயர்வுண்டு; சிறப்புண்டு. குறிக்கோள் இலாத வாழ்க்கை கடிவாளம் இல்லாத குதிரைச் சவாரியை ஒக்கும். 'குறிக்கோளிலாது கெட்டேன்' என்பார் அப்பர் பெருமான். வாழ்க்கையில் ஒன்றனைக் குறிக்கொண்டு அதனைப் பற்றுவது, கொள்வதே குறிக்கோளாகும். ஒவ்வொருவருக்கும் குறிக்கோள், அவரவர்தம் சூழ்நிலைக்கும் எண்ணத்திற்கும் ஏற்ப மாறுபடுகின்றது. 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என இருப்போர் பல்லோராவர். வாழும் முறைமையினைப் பாரதியார் பின்வருமாறு சுட்டிக் கூறியுள்ளார்:

உயிர்களிடத்தில் அன்பு
வேண்டும்;—தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு
வேண்டும்; இது
வாழும் முறைமையடி
பாப்பா,

என்பது அவர் காட்டும் வாழும் நெறியாகும். தெள்ளு தமிழில் வாழ்வின் தெளிவுரைகளை வடித்துத் தந்த வள்ளுவர் பெருமான்,

உள்ளுவதெல்லாம் உயர்
வுள்ளல மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து

என்று கூறிப் போந்தார். எண்ணங்கள் தூயனவாய்



இருத்தல் வேண்டும். அவ்வெண்ணங்கள் வழிச்செயலாற்றி உயர்ந்த குறிக்கோள் நிலையினை அடைதல் வேண்டும். குறிக்கோள் மட்டும் விழுமியதாக இருந்தால் போதாது; குறிக்கோளினை அடையும் வழியும் விழுமியதாய் விளங்குதல் வேண்டும். இதனையே அண்ணல் காந்தியார் Means should justify the ends என்று குறிப்பிட்டார்.

அன்பினாலே ஆக்கப்பட்டது இவ்வுலகம். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பது ஆன்றோர் வாக்கு. அன்புடையார் என்பையும் பிறர்க்கு மனமுவந்து ஈய, அன்பிலார் காணும் பொருள்கள் யாவும் தங்கட்கே உரிமை என்று கழறுவர். அன்பை நாம் கட்டுப்படுத்த முடியாது; அன்பைத் தடுத்து நிறுத்தத் தாழ்க்கோல் இல்லை.

அருமையான பெறுதற்கரிய உயிர் உடம்போடு பொருந்தியிருந்து உயிர் வாழ்வினை இயக்குவிக்கின்றது. அதுபோன்றே அன்பு, எல்லாரிடத்தும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தருகின்றது. உலகத்தில் இன்பம் அடைந்து இணையற்ற வாழ்வு வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்புடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயனே என்று ஆன்றோர் அறிவுறுத்தியுள்ளனர். அன்பினை அகத்தினில் — உள்ளத்தினில் கொள்ளாமல் வாழும் உயிர் வாழ்க்கை, வளமற்ற பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்ற பயனுக்கு ஒப்பாகும். எனவே அன்பின் வழியில் நின்ற உடம்பே உயிர் இயங்கும் உடம்பாகும்.

இவ்வாறெல்லாம் அன்பின் சிறப்புக் குறித்துத் திருவள்ளுவர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

சங்க காலத் தமிழர் அஃறிணை உயிர்களையும் தங்களைப் போல எண்ணி இயைந்து வாழ்ந்தனர். இயற்கையோடு கைகோத்து வாழ்ந்த வாழ்வே அவர்தம் இனிய வாழ்வாகும். பேசாதனவற்றைப் பேசுவன போலவும், கேளாதனவற்றைக் கேட்குந போலவும் எண்ணி அவர்கள் கவிதைகள் புனைந்துள்ளனர். தொல்காப்பியனார் கண்ட நெறியும் அதுவேயாகும்.

கிளி, அன்னம், நாரை முதலிய பொருள்களைத் தூதுவிடுவதாகக் கூறும் மரபும் தமிழ் மரபே! தன்னை மறந்த நிலையிலும் தலைவி

தலைவன் ‘படைப்பை வேங் கைக்கு மறந்தனர்கொல் புள்வாய்த் தூதே’ என்று ஏங்குகின்ற நிலைமையினைக் குறுந்தொகையிலே காணு கின்றோம். செந்தார்ப் பைங் கிளியினை முன் கையினில் ஏந்தித் தலைவன் இன்று வருவானோ என்று எதிர் பார்த்து ஏங்கிக் கொண்டி ருக்கும் தலைவி வாழ்விலும் அன்புடைமை கோலோச்சு கின்றதே! கொலு வீற்றிருக் கின்றதே! ‘தாதுண் பறவை பேதுறல் அஞ்சி’ மணியின் நாக்குகளைக் கட்டிவிட்டு மெல்லத் தேரினைச் செலுத் திய தலைவன் அன்பு மிகுந் தவன் அல்லனோ? தன் தாயால் நட்டு வளர்க்கப் பட்ட புன்னை மரத்தினைத் தன் தமக்கையாக எண்ணி அதன். முன்னிலையில்தன் அகனமர் காதலனோடு பேச நாணிய. தலைவியின் செயலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றன்றோ?

ஆக அன்பே தமிழர் வாழ்வின் அடித்தளமாக அமைகின்றது. ஞானசம் பந்தப் பெருமானும் கிளி யினைத் துறையாரும் கடற் றோணிபுரத் தீசனிடம் தூது விடுகின்றார். எவ் வாறு?

சிறையாரும் மடக்கிளியே
இங்கே வா தேனோடுபால்
முறையாலே உணத்தருவன்
மொய் பவளத் தொடுதரளம்
துறையாரு கடற்றோணி புரத்
தீசன் — துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்
கொருகால் பேசாயே.

என்று கிளியினைச்சீகாழிப் பதி இறைவனிடம் தூது விடுத்துத் தன் பக்திப்பர வசத்தினை வெளிப் படுத்து கின்றார். வைணவ பக்த ராகிய நம்மாழ்வார், சிறு பூவையினைத் திருமாலிடம் தூது விடுக்கச் சோர்ந்து போன அனுபவத்தினை எடுத்து மொழிகின்றார்.

நீஅலையே சிறுபூவாய்
நெடுமாலர்க்கு என் தூதாய்
நோய்எனது நுவலென்ன நுவ
லாதேஇருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை
தளர்ந்தேன்நான் இனிஉனது
வாயலகில் இன்னடிசில்
வைப்பாரை நாடாயே

என்கின்றார். ஒருவாத புக ழுடைய திருவாதவூரராம் மணிவாசகப் பெருந்தகை யும் ‘கீதமினிய குயிலே’ எனக் கோலப் பண்ணிசை கூட்டும் குயிலை அன்போடு அழைத்து அகமகிழ்கின்றார்.

இத்தகு அன்பின் வடிவாகவே ஆண்டவன் அமர்ந்துளான் என்பர் திரு மூலராம் தவமுனிவர்,

அன்பு சிவம்இரண் டென்பர்
அறிவிலார்
அன்பே சிவமாவதாரும்
அறிகிலார்

அன்பே சிவமாவ தாரும்
அறிந்தபின்
அன்பே சிவமாய்
அமர்ந்திருந்தாரே
(திருமந்திரம் : 270)

என்கின்ருர். திருமூலரே 'அன்பே சிவம்' என்ற தாரக மந்திரத்தை நமக்குத் தந்தவர் ஆவர். இப்படிப்பட்ட அன்பு வடிவமான ஆண்டவனை நாம் முக்கரணசக்தியோடு வணங்கிளுல் தீவினைகள் மாளும்; தீவினையாளர் இவ்வுண்மையினை அறிய மாட்டார்கள். அறிந்து 'சிவ சிவ' என்று துதிப்பார்களேயானுல் தேவரும், பின்னர்ச் சிவகதிக்கு உரியவரும் ஆவர்:

சிவசிவ என்கிலர் தீவினை
யாளர்
சிவசிவ என்றிடத தீவினை
மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும்
ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி
தானே.
(திருமந்திரம் : 2726)

இவ்வாறு அன்பு மயமான ஆண்டவனை அடையும் நெறி அன்பே என்கின்றது தெய்வத் தமிழ் மறையாம் திருமந்திரம்.

அன்பின் முதிர்ந்த நிலையே அருள் என்பது. அருளற்றவர்களுக்கு அவ்வுலக இன்பம் உறுதியாகக் கிடைக்காது. பொருள் இல்லாதவன் வாழ்க்கை இவ்வுலகில் பொருளற்றுப் போவது போலவே அருளற்றவன் வாழ்வு அவ்வுலகில் புக முடியாமற் போகின்றது. எனவே அருள் வேண்டும் என்ற ஆர்வம் நெஞ்சிலே நிரம்ப இருக்குமாளுல் அன்பினை அகத்தினில் வளர்த்துக் கொள்ள வேண்டும். காட்டில் கோல மயில் குளிர்காற்றிளுல் நலிகின்றது என்று கண்ட பேகன் தன் விலையுயர்ந்த போர்வையினைக் கொண்டு அதன் மென்மையுடம்பினைப் போர்த்தி அருள் கூர்ந்தான். 'பூத்தலை அரு அப்புனைகொடி முல்லை, நாத்தழும் பிருப்பப் பாடாதாயினும், கறங்குமணி நெடுந்தேர் கொள்ளெனக் கொடுத்தான், பரந்தோங்கு பண்பிற் பாரிப்பெருமகன்,' பெறற்கரிய நெல்லிக்கனியினை அன்பின் முதிர்ச்சியால் விளைந்த அருளுடைமை காரணமாக ஔவையாருக்கு ஈந்தான் அதிகமான் எனும் வள்ளல். நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம் முட்டாது தந்தான் நள்ளி எனும் வள்ளல். ஆலமர் கடவுளாம் சிவபெருமானுக்கு நீலநாகம் நல்கிளுன் ஆய் அண்டிரன் வையகம் வியக்க வாலுளைப் புரவி தந்தான் காரி எனும் வள்ளல். கூத்தர்க்காகத் தன் குறும்பொறை நன்னாட்டையே தானம் தந்தான் ஓரி எனும் வள்ளல். இவ்

வாறு இவர்கள் இன்னும் நம்மால் நினைவுகூரப்படு வதற்குக் காரணம் இவர்கள் செய்த அருட்செயலேயாம். புருவின் உயிருக்காகத் தன் தசையையே அரிந்து தந்து துலாக்கோல் புக்க மன்னன் சிபியின் வரலாறு அருள் உணர்வினைப் பறைசாற்று வதாகும்.

தொடர்புடையாரிடத்துக் கொள்ளும் பரிவே அன் பெனப்படும். தொடர்பு இல்லாத அயலாரிடத்தும் கொள்ளும் இரக்கமே அரு ளாகும். அன்பின் முதிர்ச் சியே அருள் எனப்படும். அன்பில் தாயன்பு சிறந்த தாகும். எனவே இறை யன்பினை ஆன்றோர்கள் 'தாயினும் சிறந்த தயாபரன்' என்றும், 'தாயினும்சாலப் பரிந்து' என்றும் பாராட்டிப் பேசியுள்ளனர்.

பிறப்பும் இறப்புமற்ற, விருப்பும் வெறுப்புமற்ற, தனக்குவமை இல்லாத தலை வனும் இறைவனின் இணை வடித் தாமரைகளை நாம் அடைய வேண்டுமானால் அதற்கு ஒரே வழி அன்பு வழியாகும். அனைத்துயிர்க் கும் அன்பு செலுத்துதலே ஆண்டவன் உவக்கும் நெறியாகும். நாம் அளவி டற்கரிய அன்பினை உலக உயிர்களிடத்துச் செலுத்தி னால், அவன் அளவற்ற அருள் மழையினை நம்பால் பொழிவான் என்பது திண்ணம்.

அன்பு வாழ்க! அருள் சுரக்க!!

அறம் செய்வது எப்படி ?

எஸ்வி. ஏஎன். அண்ணுமலை, பி.காம்.

'அறம் செய விரும்பு' என்ருர் ஔவையார். இந்த விருப்பம் சின்னஞ் சிறு உள்ளங்களில் எல்லாம் ஆழப் பதிந்திருக்கிறது. ஆனுல் அதைச் செய்வது எப்படி? விருப்பத்தை உண்டாக்கி விட்டால், செயல் முறையை அவர்களே அறிந்து கொள்வார்கள் என்பது அவர் கொள்கை.

தேவாரம், திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகள், திருக்குறள், திருவருட்பா ஆகிய தமிழ்மறைகளில், அறஞ் செய்யும் விருப்பம் உள்ளவர்கள் செயல் முறையில் வெற்றி பெற ஏராளமான கருத்துக்கள் இருக்கின்றன. ஆனுல் அவற்றை நடை முறையில் கொண்டு வருவது எப்படி?



'செயற்கை அறிந்தக்
கடைத்தும் உலகத்(து)
இயற்கைஅறிந்துசெயல்'
[குறள் 637]

என்பது நாயனுர் திருவாக்கு. அறங்களைப் பற்றி நூல்களில் படித்திருந்தாலும், அவ்வப்போது உலகத்துக்குத் தேவையானவற்றையும், தனது சொந்த இயல்புக்கு ஏற்றவற்றையும் அறிந்து அறங்கள் செய்ய வேண்டும். உதாரணமாக, இயல்பாகக் குடும்பப் பாசம் உள்ளவனுக்கு, மனைவியுடன் கருத்தொருமித்து அன்பாக வாழ்ந்து, நன் மக்களைப் பெற்றெடுத்து, விருந்தோம்பி வாழ்ந்தலே சிறந்த அறமாகும். இயல்பாகப் பொருளில் நாட்டமுடையவனுக்கு, அவற்றை ஈட்டி, காத்து, வகுத்து ஒப்புவுரடன் வழங்குதலும் வறியார்க்கு ஈதலுமே சிறந்த அறங்களாகும்.

பொதுவாக, 'மனத்துக் கண் மாசில' ஞக [குறள் 34] வாழ்தல் அறம். அது இல்லறம், துறவறம் என இரு வகைப்படும். அவற்றுள் இல்லறமேசிறந்தது. 'அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை' [குறள் 49] என்பது வள்ளுவர் கண்ட உண்மை. இயல்பாக இல்வாழ்வில் விருப்பம் இல்லாதவர்களுக்குத்தான், துறவறம் ஏற்றது.

இல்லறத்தில் வாழ்பவனுக்கு அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காருமை, வெஃகாமை, புறங்கூருமை, பயனில சொல்லாமை, தீவினை அச்சம், ஒப்புரவறிதல், ஈகை என்பன வள்ளுவப் பெருந்தகையால் வகுக்கப்பட்ட அறங்கள். இவை மனப்பயிற்சியாலும், இடையருத செயல் பயிற்சியாலும் கைவரப் பெற வேண்டியவை.

முதலில் இவ்வறங்களைப் பொதுவகை, சிறப்புவகை என்று இருவகைப்படுத்திக் கொள்ளலாம். தன் இயல்புக்கும், உலகத் தேவைக்கும் ஏற்றவை சிறப்பு வகை; ஏனைய பொதுவகை, சிறப்பு வகை அறங்கள் இரண்டு, மூன்றுக்குள்தான் இருக்கும். வாரத்திற்கு ஓர் அறமாக வகைப்படுத்தி, அதற்குத் திருக்குறளில் அந்த அதிகாரத்தில் உள்ள பத்துப் பாக்களை ஓதி, கூடுமானவரை நடைமுறையிலும் செய்து பழகி வர வேண்டும். மனத்தாலும், செயலாலும், நம்மை அறியாத நிலையிலும் பழக்கம் ஏற்படும் வரை செய்ய வேண்டும். இடை இடையே பொது வகையாகக் கொண்டுள்ள அறங்களையும் இதே முறையில் செய்து பழகி வர வேண்டும். இதுவே அறம் செய்யும் முறை.

இது, அமெரிக்க ஞானி பெஞ்சமின் பிராங்களின் கையாண்டு வெற்றி பெற்ற முறை.

இன்று நாட்டிற்குத் தேவையானது வறுமை ஒழிப்பே. ஆகவே பொருளை ஈட்டி, காத்து, வகுத்து ஒப்புரவறிந்து வழங்குதலும், வறியார்க்கு ஈதலுமே காலத்துக்கு ஏற்ற சிறப்பு வகையான அறங்களாகும்.

'இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்ல தரசு'
[குறள் 385]

என்பது வள்ளுவர் வாக்கு. அவ்வாறு வழங்கும் போது தன் குடும்பத்துக்கும்

எதிர்க்காலச் சேமிப்புக்கும் தேவையான வற்றை வைத்துக் கொண்டு எஞ்சியதைத்தான் வழங்க வேண்டும்.

'ஆற்றின் அளவறிந்(து)
ஈக; அது பொருள்
போற்றி வழங்கும் நெறி'
[குறள் 417]

என்பது பொய்யில் புலவர் விடுக்கும் எச்சரிக்கை. வாரி வாரி வழங்குதல் அறமாகாது. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்; அறமும் தீவினையாகும்.

பாவ, புண்ணியங்கள் பற்றி,

Anything that is mended
is but patched;
Virtue that transgresses is
but patched
with sin; and sin that
amends it
but patched with virtue.
—Shakespeare.

என்று உலகப் பெரும் கவிஞர் ஷேக்ஸ்பியர் கூறுவதை ஒப்பிட்டுப் பார்க்க.

ஆகவே,

'மருந்தாகித் தப்பா
மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட்
படின்'
[குறள் 217]

என்றபாவே ஒப்புரவறிந்து வழங்கும் அறநெறியின் உயிர்நாடியான குறட்பாவாக நான் கருதுகிறேன். 'மருந்து' 'தப்பா மரம்' என்ற சொற்களின் கருத்தாழம் அளவிடற்கரியது இப்பாவின் கருத்தை நன்கு உணர்ந்து நடப்பவன் சிறந்த அறவோனைகத் திகழ முடியும்.

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை. 4, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி: சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ் 81-பாண்டி பஸார், தியாகராயநகர், சென்னை-17.